இலக்கு
வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER

இதழ் 415
சனி, 31 ஒக்ரோபர், 2026 |
பக்கங்கள் 15
www.ilakku.org

இலங்கை அரசாங்கத்தின் செயல்பாட்டுக்கு ஐ.நா எதிர்ப்பு

பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாது காக்கும் சட்டமூலம், நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டம் மற்றும் முன்னர் முன்மொழியப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களில் உள்ள பல குறை பாடுகளை மீண்டும் உருவாக்குகிறது அல் லது விரிவுபடுத்துகிறது என்று ஐக்கிய நாடு கள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் கூறியுள்ளது.

அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக் கையில் குறித்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள் ளது. இந்த அறிக்கை இலங்கையில் உள்ள ஐ.நா. அலுவலகத்தால் இலங்கை ஊடகங் களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. முந்தைய வரைவு களை விட இந்த சட்டமூலத்தில் சில மேலதிக பாதுகாப்பு ஏற்பாடுகளும் மேம்பாடுகளும் உள்ளன.

ஆனால் பரந்த மற்றும் போதுமான அளவு துல்லியமற்ற பயங்கரவாதக் குற்றங்கள், பாதுகாக்கப்பட்ட கருத்துச் சுதந்திரத்தை பாதிக்கும் கட்டுப்பாடுகள், தடுப்புக்காவலுக்கான கட்டுப்பாடு இல்லாமை, விரிவான கைது மற்றும் தேடுதல் அதிகாரங்கள், சித்திரவதைக்கு எதிரான முறையான சட்ட நடைமுறை மற்றும் நியாயமான விசாரணைக்கான உத்தர வாதங்கள் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவை குறித்து கவலைகள் நீடிக்கின்றன என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

பயங்கரவாதம் மற்றும் அது தொடர்பான குற்றங்கள் சட்டப்பூர்வக் கொள்கைக்கு இணங்க வேண்டும் என்றும், தெளிவாகவும், குறுகியதாகவும், முன்கூட்டியே அறியக்கூடியதாகவும் வரையறுக்கப்பட வேண்டும் என்றும் ஐ.நா வலி யுறுத்தியுள்ளது. பயங்கரவாத

தொடர்ச்சி: பக்கம் 13

இலங்கையின் பணவீக்கம் அதிகரிப்பு

கொழும்பு நுகர்வோர் விலைக் குறியீட்டின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட ஒட்டுமொத்த முதன்மை பணவீக்க விகிதம் ஒக்டோபர் மாதத்தில் 8.3% ஆக உயர்ந்துள்ளது. கடந்த செப்டெம்பரில் 8.0 சதவீதமாக இருந்ததிலிருந்து, பணவீக்கம் இம்முறை ஒக்டோபரில் 8.3 சதவீதமாக அதிகரித்துள்ளது.

மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தின் தரவுகளின்படி, உணவுப் பொருட்களுக்கான பணவீக்கம் 2026 செப்டெம்பரில் 8.7 சதவீதமாக இருந்த நிலையில், 2026 ஒக்டோபரில் 8.8 சதவீதமாக உயர்ந்துள்ளது.

அதேவேளையில்,உணவு அல்லாத பொருட்களுக்கான பணவீக்கம் செப்டெம்பரில் 7.7 சதவீதமாக இருந்ததிலிருந்து, ஒக்டோபரில் 8.0 சதவீதமாக அதிகரித்துள்ளது.

வலி. வடக்கு மக்களின் தொடரும் நில மீட்பு போராட்டம்

வலி. வடக்கு பகுதிகளில் உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள தமது காணிகளை விடுவிக்க கோரி காணி உரிமையாளர்கள் இராணுவத்தினரின் “கொமோண்டோ” பங்களா முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்

காணி உரிமையாளர்கள், வெள்ளிக்கிழமை 28 ஆவது வாரமாக போராட்டத்தினை முன்னெடுத்தனர். வலி. வடக்கில் 256, 248, 251 மற்றும் 255 ஆகிய கிராம சேவையாளர் பிரிவை சேர்ந்த மக்கள் கடந்த 1990ஆம் ஆண்டு ஜூன் மாத கால பகுதியில் அவர்களது சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டிருந்தனர்.

பின்னர், அப்பகுதி உயர் பாதுகாப்பு வலயமாக காணப்படுகிறது. யுத்தம் முடி வடைந்து 17 வருடங்கள் கடந்த நிலையிலும், அப்பகுதிகளில் இருந்து பாதுகாப்பு தரப்பினர் வெளியேறாத சூழல் நிலவுகிறது. இந்நிலையில் தமது காணிகளை விடுவிக்குமாறு பல வருடங்களாக காணி உரிமையாளர்கள் போராடி வரும் சூழலில் விடுவிக்கப்படாத காணிகளை விடுவிக்குமாறு பிரதி வெள்ளிக்கிழமைகளில் போராட்டங்களை முன் னெடுப்பதற்கே காணி உரிமையாளர்கள் முடிவெடுத்திருந்தனர். இதன்படி, வெள்ளிக் கிழமை காணி உரிமையாளர்கள் போராட்டத்தை முன்னடுத்தனர்.

தேர்தல் தோல்வி – அமெரிக்காவுக்குத் தப்பியோட்டம்!

அமெரிக்காவில் இருந்தபடி, தான் தான் “பிரேசிலின் உண்மையான தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபர்” என்று ஃபிளாவியோ போல்சோனாரோ உரிமை கோருகிறார். ஞாயிற்றுக்கிழமை(25) நடைபெற்ற அதிபர் தேர்தலின் இரண்டாம் சுற்றில், லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வாவிடம் சுமார் 4.4 மில்லியன் வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்த பிரேசில் செனட்டர் ஃபிளாவியோ போல்சோனாரோ, அமெரிக்காவிலிருந்து ஒரு கடிதத்தை வெளியிட்டுள்ளார். அதில் அவர் தன்னை “பிரேசிலின் உண்மையான தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபர்” என்று அழைத்துக்கொண்டார்.

தேர்தலில் முறைகேடுகள் நடந்ததாகக் கூறும் அவர், குறிப்பாக தேர்தல் நாளில் வாக்குப்பதிவு நேரத்தை இரண்டு மணிநேரம் நீட்டித்த உச்ச நீதிமன்றத்தின் முடிவைச் சுட்டிக்காட்டுகிறார். இதற்குப் பொறுப்பானவர்கள் ஒரு குற்றவியல் அமைப்பு என்றும், அவர்கள் பிரேசிலில் சர்வாதிகாரத்தை நிறுவியுள்ளனர் என்றும் அவர் குற்றம் சாட்டுகிறார். இதற்கான எந்த ஆதாரத்தையும் அவர் வழங்கவில்லை; மேலும், அவரது சொந்தக் கட்சியான ‘லிபரல் கட்சி’ ஏற்கனவே தேர்தல் முடிவுகளை ஏற்றுக்கொண்டுவிட்டது.

செவ்வாய்க்கிழமை, உச்ச நீதிமன்றத்தின் உத்தரவை மீறி (கடவுச்சீட்டுகளை ஒப்படைக்க வேண்டும் என்ற உத்தரவை மீறி), போல்சோனாரோ தனது குடும்பத்தினருடன் பிரேசி லிலிருந்து வெளியேறினார். அவர் அர்ஜென்டினா எல்லை வழியாகச் சென்று, அங்கிருந்து மியாமிக்கு விமானத்தில் சென்றார். டிரம்ப் நிர்வாகம்

தொடர்ச்சி: பக்கம் 13

ஐரோப்பாவை விட்டு ஆசியா நோக்கி ஓடும் முதலீட்டாளர்கள்!



ஐரோப்பா முழுவதும் நிலவும் அரசியல் அமைதியின்மை மற்றும் ஈரானுடனான அமெரிக்க-இஸ்ரேலியப் போர் ஆகியவை, முதலீட்டாளர்களைத் தங்கள் பணத்தை எங்கே முதலீடு செய்வது என்பதை மறுபரிசீலனை செய்யத் தூண்டுவதால், ஹாங்காங் மற்றும் சீனப் பெருநிலப்பரப்பில் ஐரோப்பிய முதலீடுகள் பெருகக்கூடும் என தெரிவிக்கப்படுகின்றது.

ஐரோப்பாவின் மிகப்பெரிய நிதி மேலாளர்களில் ஒன்றான அலையன்ஸ் குளோபல் இன்வெஸ்டர்ஸின் (Allianz Global Investors) ஆசியா-பசிபிக் விநியோகத் தலைவர் ஜூலி கூ, ஐரோப்பாவில் நிலவும் ஸ்திரமின்மை, முதலீட்டாளர்களைப் பாரம்பரிய சந்தைகளிலிருந்து விலகிப் பல்வகைப்படுத்த ஊக்குவிக்கிறது என்று கூறுகிறார்.

ஹாங்காங் மற்றும் சீனப் பெருநிலப்பரப்புப் பங்குகள் அவற்றின் நீண்டகால மதிப்பீடுகளுக்குக் கீழே வர்த்தகம் செய்யப்படுவதாலும், அமெரிக்கப் பங்குகள் ஒப்பீட்டளவில் விலை அதிகமாக இருப்பதாலும், ஆசியப் பங்குகள் குறிப்பாகக் கவர்ச்சிகரமானவையாக உள்ளன.

“ஆசியச் சந்தைகள் மூலதனப் பாய்ச்சலைக் கைப்பற்றுவதற்கு மிகவும் சாதகமான நிலையில் உள்ளன, ஏனெனில் அவை குறைந்த அளவிலேயே முதலீடு செய்துள்ளன.”

இந்த மாற்றம் ஏற்கனவே அலையன்ஸ்ஜிஐ (AllianzGI) வணிகத்தில் பிரதிபலிக்கிறது; அதன் ஆசியா-பசிபிக் விநியோகப் பிரிவில் நிர்வகிக்கப்படும் சொத்துக்கள் கடந்த மூன்று ஆண்டுகளில் 70% உயர்ந்துள்ளன.

மேலும், சர்வதேச முதலீட்டாளர்களைப் பெருநிலப்பரப்பு சீனாவுடன் இணைக்கும் ஒரு நுழைவாயிலாக ஹாங்காங்கின் பங்கையும் கூ சுட்டிக்காட்டினார்; குறிப்பாக, அந்நகரம்

தொடர்ச்சி: பக்கம் 13

புளூட்டோவுக்கு அப்பால் ஒரு குள்ளக்கோள் – புதிய விண்பொருள்!



புளூட்டோவிற்கு அப்பால், குள்ளக்கோள் என்று வகைப்படுத்தப்படக்கூடிய ஒரு பெரிய பனிக்கட்டி விண்பொருளை வானியலாளர்கள் கண்டறிந்துள்ளனர். இது சூரிய குடும்பத்தில் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட விண்பொருட்களின் பட்டியலில் புதிய உறுப்பினராகச் சேர வாய்ப்புள்ளது.

இந்தக் கண்டுபிடிப்பு குறித்த தகவலை, சிலியில் அமைந்துள்ள ‘வேரா சி. ரூபின் ஆய்வகம்’ (Vera C. Rubin Observatory) வியாழக்கிழமை(29) வெளியிட்டது. அமெரிக்க நிதியுதவியுடன் இயங்கும் இந்த ஆய்வகத்தில், வானியல் ஆராய்ச்சிக்கென பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட, உலகின் மிகப்பெரிய 3.2 ஜிகாபிக்சல் திறன் கொண்ட டிஜிட்டல் கேமரா பொருத்தப்பட்டுள்ளது.

‘2026 ED138’ என்று தற்காலிகமாகப் பெயரிடப்பட்டுள்ள இந்த விண்பொருள், 600 முதல்

தொடர்ச்சி: பக்கம் 13

பிரிட்டன் நாளொன்றுக்கு 340 மில்லியன் பவுண்டுகளை வட்டியாகச் செலுத்துகிறது!

பிரிட்டன் நாளொன்றுக்கு 340 மில்லியன் பவுண்டுகளைச் செலவழித்து வருகிறதுஇ இது அதன் தேசியக் கடனுக்கான வட்டி மட்டுமே ஆகும் என பிரித்தானியா ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

தேசிய வரவுசெலவுத் திட்ட அலுவலகம் (OBR), இந்த ஆண்டு கடனுக்கான வட்டிச் சுமை 123.9 பில்லியன் பவுண்டுகளை எட்டும் என்று கணிக்கிறது. இது, வெறும் 7 மாதங்களுக்கு முன்பு செய்யப்பட்ட கணிப்பை விட 14.5 பில்லியன் பவுண்டுகள் அதிகம்.

2031-32 ஆம் ஆண்டிற்குள், இந்த வட்டிச் சுமை ஆண்டுக்கு 160 பில்லியன் பவுண்டுகளாக உயரும். அடுத்த 6 ஆண்டுகளில், கடனுக்கான வட்டி மட்டுமே மொத்தம் 854 பில்லியன் பவுண்டுகளை எட்டும்.

இதற்கிடையில், நாட்டின் மொத்தக் கடன் ஏற்கனவே 3 டிரில்லியன் பவுண்டுகள் என்ற உச்சத்தை எட்டியுள்ளது. இது 3.7 டிரில்லியன் பவுண்டுகளை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது; இது 2000-ஆம் ஆண்டில் இருந்த கடன் அளவை விட 10 மடங்குக்கும்

தொடர்ச்சி: பக்கம் 13

ஆனந்தபுரத்தில் விட்டுச் செல்லப்பட்ட 300-க்கும் மேற்பட்ட போராளிகள் படுகொலை: ITJP தகவல்

இலங்கை இராணுவம் 2009 ஏப்ரல் மாதம் ஆனந்தபுரத்தைக் கைப்பற்றியபோது கடுமையாகக் காயமடைந்த நிலையில் ஒரே கட்டடத்துக்குள் விட்டுச்செல்லப்பட்ட 300 க்கும் மேற்பட்ட விடு தலைப்புலிகள் இயக்கப் போராளிகள் படுகொலை செய்யப்பட்டதாக சர்வதேச உண்மைக்கும், நீதிக்குமான செயற்திட்டத்தின் புதிய அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இறுதிக்கட்டப் போரில் தப்பிப்பிழைத்தவர்கள் அளித்த வாக்குமூலங்களின் அடிப்படையில் சர்வதேச உண்மைக்கும், நீதிக் குமான செயற்திட்டத்தினால் தயாரிக்கப்பட்டு, 'ஆனந்தபுர மோதல்' எனும் தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற் கண்டவாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆனந்தபுரத்தின் முற்றுகையிடப்பட்ட பகுதியின் கிழக் குப் புறமாக இருந்த கணினி மையப்பகுதியில் போரின் இறுதி நாட்களில் காயமடைந்த நூற்றுக்கணக்கான போராளிகள் கூடிய தாகவும், 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதியன்று காய மடைந்தவர்கள் அங்கு விட்டுச்செல்லப்பட்டதாகவும், அதன்பின்னர் ளஅவர்கள் யாரையும் காணவில்லை என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி அங்கிருந்து தப்பிப்பிழைத்த ஒருவர், 'நான் வெளியேறியபோது காயமடைந்தவர்கள் உயிருடன் இருந்தனர். அவர்களிடம் துப்பாக்கிகளோ, வெடிபொருட்களோ அல்லது சய னைட்டோ இருக்கவில்லை' எனக் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை அங்கு விட்டுச்செல்லப்பட்ட 30 க்கும் மேற் பட்டோருடன் பயிற்சி பெற்று, அவர்களது குடும்பத்தினரையும் நன்கறிந்த மற்றொருவர், 'அவர்கள் மீண்டும் திரும்பி வரவில்லை. அவர்கள் அனைவரையும் படுகொலை செய்துவிடுவார்கள் என நாங்கள் ஒருபோதும் நினைக்கவில்லை. அங்கு விட்டுச்செல்லப்பட்ட காயமடைந்தவர்கள் உயிருடன் கொளுத்தப்பட்டதாகப் பின்னர் அறிந்துகொண்டோம்' எனக் கூறியுள்ளார்.

இதுபற்றி அவ்வறிக்கையில் கருத்து வெளியிட்டுள்ள சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டத்தின் நிறை வேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூக்கா, 'ஆனந்தபுரம் படு கொலைகள்

தொடர்ச்சி: பக்கம் 13

தாயகம் திரும்பிய நிலையில் கைது செய்யப்பட்ட முன்னாள் போராளி கிருஷ்ணகுமார் விடுவிப்பு!

இந்தியாவில் இருந்து நாடு கடத்தப்பட்ட முன்னாள் போராளியான கிருஷ்ணகுமார், பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கட்டு நாயக்க சர்வதேச வானூர்தி நிலையத்தில் கடந்த 27ம் திகதி கைது செய்யப்பட்ட நிலையில், நேற்று யாழ்ப்பாணம் மல்லாகம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு விடுதலை செய்யப் பட்டுள்ளார்.

2015 ஆம் ஆண்டு இந்தியாவில் கைது செய்யப்பட்ட அவர் 10 வருடங்கள் சிறைத்தண்டனை பெற்றிருந்தார். பின்னர் குறித்த தண்டனை 7 ஆண்டுகளாக குறைக்கப்பட்டிருந்தது. கிருஷ்ணகுமார் கைது செய்யப்பட்ட போது அவரிடமிருந்து சைனைட் குப்பிகள் கண்டெடுக்கப்பட்டதாக குற்றம் சுமத்தி வழக்கு தொடுக்கப்பட்டது.

ஆனால், ஆயுத தொடர்புகள் எதுவும் தனக்கு இல்லையென அவர் நீதிமன்றத்தில் கூறியிருந்தார். எவ்வாறாயினும் தண்டனை காலம் நிறைவு பெற்று 11 ஆண்டுகள் சென்ற பின்னர், அவர் தாயகம் திரும்பியிருந்தார்.

இந்த நிலையில் இலங்கை பயங்கரவாத தடுப்பு பிரிவின ரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டார். பின்னர் மல்லாகம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்.

அவர் கைது செய்யப்பட்டமை தொடர்பாக அரசாங்கத்துடன் தொடர்புக் கொண்டு அவரது விடுதலைக்கான நடவடிக்கைகள் முன் னெடுக்கப்பட்ட நிலையில் இன்று அவர் விடுவிக்கப்பட்டார்.

ஆசிரியர் தலையங்கம் | 24 ஒக்ரோபர், 2026

நவம்பர் 3க்கு பின்னர் சிறிலங்கா ஈழத்தமிழர்களின் இறைமை நீக்க அரசியலை வேகப்படுத்துவதைத் தடுக்க வேண்டும்.

ஈரான் மீது அமெரிக்கா குறுகிய காலத்தில் "குண்டுகளுக்குத் தாயான குண்டுகள்" என்று கூறப்படும் பலத்த எடையுள்ள குண்டுகளை வீசக்கூடும் என்கிற எதிர்பார்ப்பு உலகில் பலமாகவுள்ளது. 29.10.2026 இல் அமெரிக்கா போரை முடிக்குமாறு ஈரானுக்கு எழுத்துவடிவில் கடிதம் வழங்கியமை அமெரிக்கா பலத்த ஆயுதங்களைப் பயன்படுத்தி குறுகிய காலத்தில் பலத்த தாக்குதலை ஈரான் மேல் நிகழ்த்துவதற்கான முதற்கட்ட செயற்பாடாகச் சர்வதேச ஆய்வாளர்களால் விமர்சிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் அமெரிக்கா தான் மேற்கொள்ளக் கூடிய இராணுவ நடவடிக்கைகளுக்கு நியாயப்படுத்தல்களை இப்பொழுதே கசிய விடத் தொடங்கி விட்டது.

ஈரான் கடலடி எரிசக்தி வழங்கு குழாய்கள் உட்பட வர்த்தகப் போக்குவரத்துக்கான கப்பல்கள் வரை அனைத்துலக வர்த்தகத்தை நாசப்படுத்தக் கூடிய வேலைகளைச் செய்வார்கள் என்பதே அமெரிக்காவின் பரப்புரையாகவுள்ளது. ஒன்றைத் திருப்பித் திருப்பிச் சொன்னால் அது உண்மை போல மனதில் பதிவாகலாம் என்கிற கூற்றே இந்நேரத்தில் நினைவுக்கு வருகிறது.

எது எப்படியிருப்பினும் நவம்பர் 3-ம் நாளுக்குப் பின் தானே உலகின் அரசன் என்ற நிலையில் ட்ரம்ப் அவர்களும் தானே இஸ்ரேலின் ஒரே பாதுகாப்பாளர் என்ற நிலையில் நெத்தன்யாகூவும். மத்திய கிழக்கில் பலத்த ஆயுதப்பயன்பாடுகளை மேற்கொள்கையில் கடந்த 40 ஆண்டுகளாக அமெரிக்காவுடனும் இஸ்ரேல் உடனும் வாழ்ந்து பழகிய ஈரானியர்கள் தங்களைப் பாதுகாப்பதற்கான தந்திரோபாயங்களை கட்டமைத்திருப்பார்கள் என்பதும் உலகுக்குத் தெரியாத விடயமல்ல.

அதனால்தான் நவம்பர் 3க்குப்பின்னர் உலகின் புதிய அரசியல் ஒழுங்குமுறை என்பது வல்லாண்மைகளினதும் அதிகார மையங்களினதும் ஆயுதபல பிரயோக அடக்குமுறை ஒழுங்குமுறையாக மாறலாம் என்னும் அச்சம் உலக அரசியலில் பலமாகவுள்ளது.

இந்நிலையில் "பறக்க பறக்க வாழாதே வர வரக்கண்டு வாழ்" என்னும் குருஞானசம்பந்தரின் அழைப்புக் கேற்ப வருவதை எதிர்கொள்ள வல்ல இடர்முகாமைத்துவ மையங்கள் ஈழத்தமிழர் தாயகத்தில் புலம்பதிந்து வாழ் உலக இனமான ஈழத்தமிழினத்தால் துறைசார் நிபுணர்களின் மதியும் பொருள்வளமுள்ளோர் நிதியும் ஈழத்தமிழர் தேசியச் சிந்தனையாளர்களின் அறிவும் அனுபவமும் இணைந்த நிலையில் கட்டமைக்கப்பட வேண்டும் என்பதே இலக்கின் விருப்பு மட்டுமல்ல பணிவான வேண்டுகோளும் கூட.

இவ்விடயத்தில் வேகமான ஈழத்தமிழர் ஒருங்கிணைப்பு இல்லையேல் வான்வெளிப் போரும் காலநிலைச் சீர்கேடும் உலகின் உணவு மருந்து எரிசக்தி போக்குவரத்துக்களான கடற்பாதைகளைப் பாதுகாத்தல் என்ற நோக்கிலேயே வேகம் பெறும். இதனால் இந்துமாக்கடற்பாதையின் முக்கிய சந்தியாக மட்டுமல்ல சக்தியாகவும் உள்ள ஈழத்தமிழர் தாயகம் நிச்சயம் பலவிதமான பாதிப்புகளைச் சந்திக்க வேண்டி வரும்.

இதனைக் கவனத்தில் எடுத்து ஈழத்தமிழர்களுக்கான இடர்முகாமைத்துவ திட்டங்கள் அமைப்புக்கள் மையங்கள் உடனடியாகத் தொடங்கப்படல் வேண்டும். இல்லையென்றால் ஈழத்தமிழர்கள் மிகுந்த சோத னைகளைச் சந்திக்க வேண்டி வரும் என்பதும் இலக்கின் இவ்வாரக் கருத்தாக உள்ளது.

மேலும் இவ்வாறு உலக அரசியல் ஒழுங்குமுறை சிக்கல்களை அனுபவித்த நேரங்களில் எல்லாம் சிங்கள பௌத்த பேரினவாதம் சூழ்நிலையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி ஈழத்தமிழர்களின் இறைமை நீக்கம் தேசிய நீக்கத்தை வேகப்படுத்துவது சிங்கள அரசியல் வரலாறாகவுள்ளது. இதற்கு தேசிய மக்கள் சக்தி ஆட்சியாளர்களும் விதிவிலக்காக அமைய மாட்டார்கள்.

இந்நிலையை ஈழத்தமிழர்கள் எதிர் கொள்வது எப்படி என்ற கேள்விக்கு சேர்பியாவில் மாணவர்கள் ஏற்படுத்தியுள்ள அரசியல் மாற்றம் விடையாக அமைகிறது. ஈழத்தமிழர்களுக்கு அவர்களின் ஜென் Z அல்பா தலைமுறையினரை ஈழத்தமிழர்களை எவ்வாறு இன்றைய உலக சூழ்நிலையை எதிர்கொள்ளப் பயன்படுத்த வேண்டும் என்பதற்கான முன்னுதாரணமாக சேர்பிய மாணவர்கள் அமைகின்றனர் என்பது இலக்கின் கருத்தாகவுள்ளது.

இந்த வாரம் கடந்த வாரத்தில் நடந்த சேர்பியாவின் தேர்தலில் மாணவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்கள் 250 பேரடங்கிய பட்டியல் 53 வீத வாக்குகளைப் பெற்று கடந்த பதினான்கு ஆண்டுகளாக ஆட்சியில் இருந்த அரசத்தலைவர் அலெக்கசான்டர் வூஜிச் கட்சிக்கு 40 வீதமான வாக்குகளே கிடைத்த நிலையில் அவருடைய ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்த செய்தியுடன் ஆரம்பமாகியது. சேர்பிய மாணவர்கள் சேர்பியாவின் நோவி சாட் (Novi Sad) நகரில் புனரமைக்கப்பட்ட ரயில் நிலையம் ஒன்றின் மேல் விதானம் திடீரென இடிந்து விழுந்ததால் 16 பயணிகள் மரணமடைந்தார்கள்.

இதற்கு அரசாங்கத்தின் ஊழலும் குரோனிசம் (Cronyism) என்னும் தகுதியானவர்களை அல்லாது தமக்கு விரும்பியவர்களை பணிக்கு அமர்த்துவதுமே காரணமென இவற்றை மாற்ற வேண்டுமென்றே மாணவர்கள் போராடத் தொடங்கினார்கள்.

இந்தப் போராட்டம் இந்த நிகழ்வை வைத்துக் கொண்டு சரி பிழை பேசி விதண்டாவாதம் செய்து தனியாட்களை குறை காணும் போக்கில் அமையாது ஒரு நிகழ்வு என்பது அந்நேரத்தில் உள்ள அமைப்பு முறையின் (System) விளைவு என்பதாக மாணவர்களால் பார்க்கப்பட்டது. இந்த முறைமையை மாற்ற இரண்டு வருடங்களாக மாணவர்களின் போராட்டம் குறைகாண் போராட்டமாக இல்லாது மாற்றத்தை உருவாக்கும் போராட்டமாக அந்த மாற்றத்தை உருவாக்கத் தகுந்தவர்களைக் தாங்களே கண்டறியும் தன்மையானதாகத் தொடர்ந்தது.

இந்த இரண்டு வருட காலத்தில் மாணவர்கள் தமக்குள் யார் தலைவர் என்கிற முறையில் செயற்படாது ஆளுங்கட்சியாக இருந்தவர்களுக்கு எதிரான மக்கள் எல்லோருடையவும் வாக்குகளை ஒன்று சேர்த்தல் என்பதனை மையமாகக் கொண்டு செயற்பட்டனர் என்பதனை ஈழத்தமிழர்கள் மனதிருத்த வேண்டுமென இலக்கு கேட்டுக்கொள்கிறது.

இதற்காக சமுதாயத்தின் சகல நிலைகளிலும் இருந்து மாணவர்கள் 250 வேட்பாளர்களை தெரிவு செய்தனர். மாணவர்கள் அழைத்தவர்கள் வேட்பாளர்களாக நிற்கத் தாங்களும் இசைந்தனர். மாணவர்களுக்குக் கிடைத்த இந்த ஆதரவே இந்த வெற்றிகரமான மாற்றத்துக்கான மூலகாரணமாகியது.

இந்த முன்னுதாரணங்களை எமது ஜென் Z அல்பா ஈழத்தமிழ் இளையவர்களும் பெரியவர்களும் நன்கு அவதானித்து எம்மிடையிலும் இத்தகைய தகுதியானவர்களை இளையவர்கள் இனங்காண்பதும் இனங்காணப்பட்டவர்கள் மாற்றத்துக்குத் தங்களைக் கருவியாக்குவதற்கான மனநிலையுடன் அர்ப்பணிப்புடன் செயற்படுவதுமான இரு வழித் தொடர்பு மூலமாகவே சேர்பியாவில் ஏற்பட்டமை போன்ற மாற்றத்தை ஈழத்திலும் ஏற்படுத்த இயலும் என்பதே இலக்கின் இவ்வாரக் கருத்தாக உள்ளது. தலைவர் யார் என்று செயற்படாது ஈழத்தமிழின பகைமைகளுக்கு எதிராகவுள்ள மக்கள் அனைவரையும் ஒருங்குசேர்த்தல் வழியாகவே இதனைச் சாதிக்கலாம் என்ற சேர்பிய மாணவர் போராட்ட வழிகாட்டலை ஈழத்தமிழர்கள் ஏற்றுச் செயற்பட வேண்டும் என்பது இலக்கின் பணிவான வேண்டுகோளாகவுள்ளது.

இன்று அக்டோபர் 31 வன்னியரசின் இறுதி அரசனான பண்டாரவன்னியனின் நினைவேந்தும் நாளாக வும் உள்ளது. பண்டார வன்னியனின் வரலாற்றை படிப்பவர்களுக்கு பிரித்தானியர்களுக்கு எதிரான அவரின் போராட்டத்தில் கண்டி அரசுடனான அவரின் நெருக்கமான செயற்பாடு இலங்கைத் தீவில் உள்ள இருதேச இனங்களும் இலங்கைத் தீவைப் பாதுகாப்பதில் இணைந்தே செயற்பட வேண்டும் என்கிற வரலாற்று உண்மையை வெளிப்படுத்துகிறது.

அதே வேளை வன்னியின் இறைமையின் தனித்துவத்தைப் பேணிய நிலையிலேயே பண்டார வன்னியனின் அனைத்துச் செயற்பாடுகளும் அமைந்ததையும் காணலாம். இதனை இன்றைய ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் மனதிருத்தி சிங்கள அரசியல்வாதிகளைத் தலைமையாக ஏற்காது சமத்துவமான இலங்கைத் தீவின் அரசியல்வாதிகளாக ஈழத்தமிழர்களின் இறைமையை முன்னிறுத்திய நிலையிலேயே எந்தத் தொடர்பையும் மேற்கொண்டால்தான் ஈழத்தமிழர்களின் இறைமையின் தனித்துவமும் அதன் வழியான தாயக தேசிய தன்னாட்சி உரிமைகளை மீள நிறுவுதலும் நடைமுறைச்சாத்தியமாகும் என்பதனை இலக்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறது.

இன்று பலஸ்தீனிய மக்களின் வாக்களிப்பு உரிமை மறுக்கப்பட்ட இஸ்ரேலிய தேர்தலில் யாருக்கும் அரசமைப்பதற்காக உரிய 61 ஆசனங்கள் கிடைக்காத நிலையில் அரபு - பலஸ்தீனிய கட்சி பெற்றுள்ள 19 ஆசனங்களை எதிர்க்கட்சி தனதாக்கினால் தான் அதனால் அதன் 48 உடன் 19 ஐச் சேர்த்து 67 ஆசனங்களைப் பெற்று நெத்தன்யாகூவின் 58 ஆசனங்களை விட 9 ஆசனங்களை மேலதிகமாகப் பெற்று அரசமைக்கலாம். எந்தச் சூழலிலும் பாதிப்புறும் மக்களின் ஒற்றுமைதான் அவர்களுக்கு பலமாக அமைகிறது என்பதை ஈழத்தமிழ் அரசியல்வாதிகளுக்கு உணர்த்துவதற்காகவே இதனைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

அத்துடன் பலஸ்தீனிய அதிகாரசபையின் முன்னாள் தலைவர் அப்பாஸ் தாங்கள் இஸ்ரேலிய வெற்றி பெற்ற யூதர்கள் உடன் அரசமைப்பது குறித்துப் பேசத்தயார் என அறிவித்து அரபு பலஸ்தீனிய கட்சியினர் எதிர்க்கட்சியுடன் இணைந்து நெத்தன்யாகூவை பதவியில் இருந்து அகற்ற வழியமைத்துக் கொடுத்துள்ளார் ஆனால் யூதர் என்னும் இனமதவெறித்தனம் உச்சமாக உள்ள இஸ்ரேலிய அரசியல்வாதிகள் போராடும் ஹமாஸை அழிப்பதுதான் தமது தலையாய நோக்கமாகக் கருதுகின்றார்களே தவிர இஸ்ரேலிய நாட்டையோ மக்களையோ கவனத்தில் எடுக்கத் தவறுகின்றார்கள். இத்தகைய போக்கே சிறிலங்காவினதும் என்பதனால் ஈழத்தமிழர்கள் தமக்குள் ஒன்றுபட்டு நிற்க வேண்டிய மாதமாக ஈழத்தமிழரின் மாவீரர் மாதமாக இந்த நவம்பர் மாதம் அமைகிறது என்பதையும் இலக்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறது.

ஆசிரியர்

விதுரன்

யாழ்ப்பாணம் செம்மணி-சித்துப்பாத்தி மயான வளாகத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் அகழ்வாராய்ச்சியானது, தசாப்தங்களாகத் தங்களின் உறவுகளின் நிழலுக்காகவும் நீதிக்காகவும் ஏங்கித் தவிக்கும் தமிழ் மக்களின் மனச்சாட்சியோடு நேரடியாகப் பிணைக்கப்பட்ட பெரும் சோகம் நிறைந்த மனிதப்பேரவலத் தின் சான்றுகள் நிறைந்த வரலாறாகும்.

கடந்த 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளின் தொடர்ச்சியாக, களனிப் பல்கலைக்கழகத்தின் முதுகலைத் தொல்லியல் நிறுவனத்தின் பேராசிரியர் ராஜ் சோமதேவ மற்றும் அனுஷா வன்னிநாயக்க ஆகியோரால் தயாரிக்கப்பட்டு, கடந்த அக்டோபர் 19 ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 17 பக்கங்களைக் கொண்ட மூன்றாவது இடைக்காலச் சுருக்க அறிக்கையானது, பாதிக்கப்பட்ட தரப்பினர் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் மத்தியில் பாரிய கொந்தளிப்பையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

மரணதண்டனைக் கைதியான முன்னாள் லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ, 1996 ஆம் ஆண்டு கால கட்டத்தில் தாங்கள் படுகொலை செய்து புதைத்தவர்க ளின் உடல்களும் தற்போதைய அகழ்வுகளில் இருக்கக்கூடும் என்று பகிரங்கமாக மீளுறுதிப்படுத்தியுள்ள நிலையில், மறுபுறம் தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த இடைக்கால அறிக்கை, செம்மணியின் கொடூரமான குற்றவியல் உண்மைகளை மூடிமறைத்து, அதனைச் சாதாரண மயான நிகழ்வாகவும் இயற்கை அனர்த்தமாகவும் சித்திரிக்க முயலும் திட்டமிட்ட ஏமாற்று வித்தையாக வெளிப்பட்டுள்ளது.

இந்த இடைக்கால அறிக்கையின் தர்க்கரீதியான முரண்பாடுகளும், அறிவியல் பூர்வமற்ற எடுகோள்களும் ஆரம்பத்திலிருந்தே பலத்த சந்தேகங்களை எழுப்புகின்றன. அகழ்வாராய்ச்சியின்படி, வெறும் 513சதுர மீற்றர் பரப்பளவு கொண்ட குறுகிய நிலப்பரப்பிலிருந்து குறைந்தபட்சம் 574தனித்தமனிதஎலும்புக்கூடுகள்கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதில் மிக முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய அதிர்ச்சியளிக்கும் புள்ளிவிவரம் என்னவென்றால், மீட்கப் பட்ட எச்சங்களில் 41சதவீதமானவை குழந்தைகளும், 22சதவீதமானவை சிசுக்களுமாகும். அதாவது, தோண்டி எடுக்கப்பட்ட உடல்களில் 60 சதவீதத்திற்கும் அதிகமானவை பிஞ்சுக் குழந்தைகளின் உடல்களாகும்.

ஒரு குறிப்பிட்ட சிறிய நிலப்பகுதியில் இவ்வளவு அதிகமான எண்ணிக்கையிலான மனித உடல்கள், அதிலும் பெரும்பான்மையாகச் சிறுவர்களும் சிசுக்களும் எவ்வாறு புதைக்கப்பட்டிருக்க முடியும்? ஆனால், பேராசிரியர் சோம வேவவின் அறிக்கை இந்தச் பயங்கரமான யதார்த்தத்தை எதிர்கொள்ளத் தவறிவிட்டு, இந்த மனிதப் பேரவலத்தைத் திசைதிருப்பும் அபத்தமான வாதங்களை முன்வைக்கிறது.

அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள மிக முக்கியமான மற்றும் ஆபத்தான அனுமானம், 'இவ்வளவு அதிகமான உடல்கள் கண்டெடுக்கப்பட்டமை ஒரு தொற்று நோயினாலோ அல்லது இயற்கைப் பேரழிவினாலோ நிகழ்ந்திருக்கக்கூடும்' என்பதாகும்.

மேலும், உயிரிழந்தோரின் தனிப்பட்ட உடைமை களைச் சேர்த்துப் புதைப்பதை விட, அவசரமாக உடல் களை அடக்கம் செய்வதே அப்போது கரிசனையாக இருந் திருக்கலாம் என்றும் அறிக்கை வாதிடுகிறது.

இது முழுக்க முழுக்க வரலாற்றுக்கு முரணான மற்றும் அடிப்படைய விஞ்ஞான அறிவியல் ஆதாரமற்ற புனைகதையாகும். யாழ்ப்பாண வரலாற்றில் குறிப்பிட்ட இந்தக் காலப்பகுதியில், ஆயிரக்கணக்கான குழந்தைகள் கொத்துக் கொத்தாக மாண்டுபோகும் அளவுக்கு எந்தவொரு பெருந்தொற்று நோயோ அல்லது பேரிடரோ ஏற்பட்டதாக மருத்துவ ஆவணங்களோ வரலாற்றுப் பதிவுகளோ எங்குமே இல்லை.

போர்ச்சூழலில் காணாமல்போன பல்லாயிரக் கணக்கானோரின் உறவுகள் துடிதுடித்துக் கொண்டிருக் கும் வேளையில், அரசின் பாதுகாப்பிற்காகத் தொல்லியல் அறிவியலைத் தவறாகப் பயன்படுத்தி, இத்தகைய 'தொற்று நோய்' என்ற தற்காப்பு வாதத்தை அறிக்கை முன்வைப்பது அரசாங்கத்தின் நேரடித் தலையீட்டைக் காட்டுகிறது.

அதுமட்டுமன்றி, முந்தைய அறிக்கைகளில் 'மனிதப் புதைகுழி' என்ற பதத்தைப் பயன்படுத்திவந்த பேராசிரியர் ராஜ் சோமதேவ, தற்போதைய இடைக்கால அறிக்கையில் வேண்டுமென்றே அந்த வார்த்தையைத் தவிர்த்துள்ளமை கவனிக்கத்தக்கது.

'மனிதப் புதைகுழி' என்ற பதத்தை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக இதனையொரு சாதாரண ஒழுங்கமைக்கப் பட்ட மயானப் பயன்பாடாகக் காட்ட முயல்வது, படையினரை யும், புலனாய்வாளர்களையும் குற்றங்களிலிருந்து தப்ப வைப்பதற்கான தந்திரோபாயமாகும்.

சித்துப்பாத்தி பகுதி என்பது பாரம்பரியமாக இந்து மதச் சடங்குகளின்படி உடல்களைத் 'தகனம்' செய்யும் இடமே தவிர, அங்கு உடல்களைக் குழி தோண்டிப் புதைக்கும் வழமை எக்காலத்திலும் இருந்ததில்லை.

மேலும், குறிப்பிட்ட அந்த நிலப்பகுதி முறையான மயானத்துக்காக ஒதுக்கப்பட்டதற்கான சட்டபூர்வ ஆவணங் களோ அல்லது பதிவுகளோ எங்குமில்லை. அவ்வாறிருக் கையில், அதனைச் சாதாரண மயானம் என்று அறிக்கை எவ்வாறு சான்றளிக்க முடியும்?

அகழ்ந்தெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகள் வெறும் ஒரு மீற்றர் அல்லது அதற்கும் குறைவான ஆழத்திலேயே கண்டெடுக்கப்பட்டுள்ளமையும், பல உடல்கள் ஒன்றின் மேல் ஒன்றாகக் குவித்து வீசப்பட்டிருப்பதும், இது எந்தவிதமான முறைசார்ந்த அடக்க முறையையும் குறிக்கவில்லை என் பதைத் தெளிவாக உணர்த்துகிறது.

மேலும், வயது வந்தவருடன் ஒரு குழந்தை இணைக்கப்பட்டவாறு ஒன்றுக்கு மேற்பட்ட எலும்புக்கூட்டு இணைப்புகள் கண்டறியப்பட்டமை மிகவும் அசாதாரண மானது. இது சாதாரணமானதொரு ஈமச்சடங்கு முறைக்குப் பொருந்தவே பொருந்தாது.

ஆபத்தான சூழலில், அவசர அவசரமாக உடல்கள் மனிதக் குப்பைகளுடன் சேர்த்து வீசப்பட்டதையே இது போன்ற சான்றுகள் சுட்டிக்காட்டுகின்றன. ஆனால், அறிக்கை இவற்றை மூடிமறைக்க முற்படுவது மனிதாபிமானத்தை மறந்து துறைசார்ந்த நிபுணத்துவத்துக்குச் செய்யப்படும் பெரும் துரோகமாகும்.

அதேபோன்று, உடல்களுடன் மீட்கப்பட்ட பொருட் கள் மற்றும் நாணயங்கள் குறித்த விளக்கங்களிலும் திட்டமிட்ட மழுப்பல்கள் அரங்கேறியுள்ளன. அகழ்வாராய்ச்சி யின் போது 1870ஆம் ஆண்டின் நாணயம் ஒன்று கண் டெடுக்கப்பட்டதைச் சுட்டிக்காட்டி, இந்த மயானம் 19ஆம் நூற்றாண்டிலிருந்தே பயன்பாட்டில் உள்ளது என்ற தவறான பிம்பத்தை உருவாக்க முயன்றுள்ளனர்.

ஆனால், அதே அறிக்கையின் மற்றொரு பகுதியில், சாம்பல் அடுக்கிலிருந்து 1920, 1944, 1963, 1975, 1978, 1982, 1991 மற்றும் 1994 ஆகிய ஆண்டுகளைச் சேர்ந்த நாணயங்கள் மீட்கப்பட்டதாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இதில் 1991 மற்றும் 1994 ஆம் ஆண்டுகளைச் சேர்ந்த நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டமை மிக முக்கியமான வரலாற்றுத் திருப்புமுனையாகும்.

ஏனெனில், 1990களின் நடுப்பகுதியில்தான் யாழ்ப் பாணத்தில் இராணுவக் கட்டுப்பாடுகள் உச்சத்தி லிருந்ததும், பல்லாயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டதும் நிகழ்ந்தது. 1994 ஆம் ஆண்டைய நாணயங்கள் உடல்களுடன் தொடர்புடையனவாக இருக்கும் பட்சத்தில், இந்தப் புதைப்புகள் அனைத்தும் திட்டமிட்ட படுகொலைகளின் உச்சக்கட்டக் காலமான 1990களிலேயே நடந்துள்ளன என்பதை இந்த நாணயங்களே சாட்சியமளிக்கின்றன. இருப்பினும், இந்தக் காலக்கணிப்பு உண்மைகளை அறிக்கை மேலோட்டமாகக் கடந்து செல்வது சந்தேகங்களை மேலும் வலுப்படுத்துகிறது. செம்மணி மனிதப் புதைகுழியில் ஆடைகள் பெருமளவில் அகழ்ந்தெடுக்கப்படவில்லை என்பதை வைத்து, இறந்தவர்கள் ஆடைகள் இன்றியே புதைக்கப்பட்டனர் என்ற முடிவுக்கு வர முடியாது என்று வாதிடும் அறிக்கை, அதனை ஒரு 'புதைபடிவச் சிதைவுசார் அவதானிப்பு' எனக்கூறி கடந்து செல்கிறது.

மண்ணின் காரத்தன்மை மற்றும் இரசாயனப் பண்புகளால் துணிகள் உக்கிப்போயிருக்கலாம் என்பது உண்மைதான் என்றாலும், செருப்புகள், பிளாஸ்டிக் பொத் தான்கள், தாயத்துக்கள் மற்றும் இலங்கை நாணயங்கள் போன்ற நீடித்து உழைக்கக்கூடிய பொருட்கள் பலவற்றுடன் மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, ஒரு எலும்புக்கூட்டுடன் காலணி இணைந்திருந்தமை மற்றும் பல தனிப்பட்ட உடைமைகள் கண்டறியப்பட்டமை, அவை சாதாரணமானவர்களின் இயற்கையான மரணத்திற்கான சான்றுகள் அல்ல என்பதை மிகத் தெளிவாகக் காட்டுகின்றன.

தொடர்ச்சி: பக்கம் 13

செம்மணி புதைகுழி ஆய்வாளர் பேராசிரியர் ராஜ் சோமதேவாவின் அறிக்கையானது இலங்கையின் இனப்படுகொலையினை மூடிமறைக்கும் ஒரு சதியாகவே பார்க்கத் தோன்றுகிறது.

செம்மணிப் படுகொலை தொடர்பாக தொல்பொருள் ஆய்வாளரான பௌத்த சிங்கள பேராசிரியர் ராஜ் சோமதேவாவின் அறிக்கை இனப்படுகொலைக் காகவோ, ஈழத் தமிழர்களின் நீதி தொடர்பாகவோ இனியும் இலங்கை அரசை நம்பத் தேவையில்லை, சர்வதேச பொறிமுறையே சரியான நீதியைப் பெற்றுத்தரும் என்பதையே இந்த அறிக்கை உறுதிப்படுத்தியுள்ளது.

செம்மணி புதைகுழியில் இதுவரை 583, தமிழினப் படுகொலைகளின்எலும்புகள்மீட்கப்பட்டன.அதுதொடர்பாக ஆய்வு மேற்கொண்ட பௌத்த சிங்கள பேராசிரியர் ராஜ் சோமதேவா செம்மணி தொடர்பான இடைக்கால அறிக்கையை நீதிமன்றத்திற்கு வழங்கியிருந்தார். சுமார் 170 பக்கங்களைக் கொண்ட குறித்த இடைக்கால அறிக்கையில் செம்மணியில் புதைக்கப்பட்டவர்கள் இயற்கை அனர்த்தம், தொற்றுநோயால் மரணித்தவர்களாக இருக்கலாம் என்பதைக் குறிப்பிட்டு இனப்படுகொலையாளர்களைக் காப்பாற்றும் ஒரு ஆவணமாகவே தயாரித்துள்ளார் என்ற சந்தேகமே அனேகமான தமிழர்களிடையே சந்தேகமாகப் பார்க்க முடிகிறது.

செம்மணியில் 1996 செப்டம்பர் 07 அன்று யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவியான கிருசாந்தி குமாரசாமி இராணுவத்தினரால் கடத்தப்பட்டு, பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டார். அவரைத் தேடிச் சென்ற அவரது தாய் இராசம்மா, 16 வயது தம்பி பிரணவன் மற்றும் பக்கத்து வீட்டு நண்பரான கிருபாமூர்த்தி ஆகிய மூவரும் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டு செம்மணி பகுதியில் புதைக்கப்பட்டனர்.

இந்தப் படுகொலை நடந்த காலமானது 1994 நவம்பர் 12 தொடக்கம் 2005 நவம்பர் 19 வரை ஆட்சியில் இருந்த ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில், முக்கியமாக 1994 தொடக்கம் 2000 வரை ஆட்சியில் ஈபிடிபி டக்ளஸ் தேவானந்தா தலைமையில் தெரிவான நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அஷ்ரப் தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள், வெளிவிவகார அமைச்சராக இருந்த கதிர்காமர் ஆகியோர் இணைந்த சந்திரிகா தலைமையிலான நடந்த படுகொலையாகும். அந்தக் காலத்தில் குறிப்பாக 1996, 1997, 1998 காலப்பகுதியில் நூற்றுக்கணக்கான தமிழர்கள் சுற்றிவளைப்பு மூலமாகவும், கடத்தப்பட்டும், இனப்படுகொலை செய்யப்பட்டும் செம்மணி, சிந்துமாத்தி பகுதிகளில் புதைக்கப்பட்டனர் என்பதே உண்மையான வரலாறு என்பதை இன்றுவரை தமிழ் மக்கள் நம்பியுள்ளனர்.

இதற்கு ஆதாரமாக கிரிஷாந்தி கொலை வழக்கில், முதலாம் குற்றவாளிகளான லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ, மற்றுமொரு முதியான்சேலாகே ஜயதிலக, பிரியந்த பெரேரா, பிரதீப் பிரியதர்ஷன, டி. வி. இந்திரஜித் குமார உள்ளிட்ட 05 இராணுவத்தினர் கைதாகி கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது. அந்த ட்ரையல்-அட்-பார் தீர்ப்பாயம் 1998 ஜூலை 03 அன்று கொடூரக் குற்றத்தில் நேரடியாக ஈடுபட்ட இராணுவத்தினருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது. மரண தண்டனைக் கைதியான கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ யாழ்ப்பாணம் செம்மணி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் 1996 காலப்பகுதிகளில் போர்க்காலத்தில் இராணுவத்தினரால் கொல்லப்பட்ட நூற்றுக்கணக்கான தமிழ் மக்களின் உடல்கள் புதைக்கப்பட்டுள்ளதாக அவர் பகிரங்கமாகத் தெரிவித்தார்.

1996களின் பிற்பகுதியில் யாழ்ப்பாணம் செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பான விசாரணைகளின்போது, இலங்கை இராணுவத்தினரால் பலர் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டதாக கிரிஷாந்தி கொலைக் குற்றத்தில் மரண தண்டனை விதிக்கப்பட்ட சோமரெட்ண ராஷபக்ஷ செம்மணி புதைகுழி வழக்கு விசாரணையின்போது, குற்றம் சாட்டப்பட்ட இலங்கை இராணுவத்தின் முன்னாள் லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ நீதிமன்றத்தில் அளித்த வாக்குமூலத்தில் இந்த விவரங்களைக் குறிப்பிட்டிருந்தார். அவரது வாக்குமூலத்தின்படி பல்வேறு திடுக்கிடும் உண்மைகளை அவர் கூறியிருந்தார்.

செம்மணிப் படுகொலைகளுடன் சம்பந்தப்பட்டதாக இராணுவத்தினரின் சில பெயர்களையும் குறிப்பிட்டிருந்தார். அவர் கூறிய பெயர்கள் கப்டன் லலித், கப்டன் சிறில் ஜெயவர்தனா, மேஜர் வீரக்கொடி, மேஜர் குணசேகரா, கப்டன் லெப்டினன்ட் துடுகல்ல ஆகியோர் கைது செய்த தமிழர்களைச் சித்திரவதை செய்தனர் என அந்த வழக்கின்போது 1997இல் நீதிமன்றில் கூறியதாகப் பத்திரிகைகளிலும் அப்போது செய்திகள் வந்தன.

உதயகுமார், செல்வரெத்தினம், யோகேஷ்வரன் உட்பட 25 பேர் முகாமில் தடுத்து வைத்தனர் எனவும், சிலரைத் தலைகீழாகத் தொங்கப்போட்டு வயலேட்டால் உடம்பில் கீறினர் எனவும் சோமரெட்ண ராஷபக்ஷ என்ற முதலாம் எதிரி வாக்குமூலம் கொடுத்த செய்திகளும் பத்திரிகையில் அப்போது வெளிவந்தன.

பொதுவாக, 1996 காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றியபோது செம்மணி மற்றும் அரியாலைச் சோதனைச் சாவடிகளில் நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு, பின்னர் கொல்லப்பட்டு செம்மணிப் பகுதியில் புதைக்கப்பட்டனர் என்ற ஆதாரபூர்வமான சாட்சியத்தை நீதிமன்றில் அவர் கூறியிருந்தார்.

படுகொலையில் யார் யார் இராணுவத் தளபதிகள் சம்பந்தப்பட்டனர் என்பதை நீதிமன்றில் வாக்குமூலமாகவும் வழங்கியிருந்ததுடன், எந்தெந்த இடங்களில் புதைக்கப்பட்டனர் என்பதையும் தாம் அந்த இடங்களைக்

பா.அரியநேத்திரன்

காட்ட முடியும் எனவும் கூறியிருந்தார். ஆனால் அவரை இதுவரை செம்மணி சிந்துபாத் புதைகுழிகளில் கொண்டு சென்று அடையாளம் காட்ட முன்பு இருந்த அரசும் தற்போதைய அநுர அரசும் தவிர்த்துள்ளன.

அந்த மனிதப் புதைகுழிகளில் இருந்து பல சான்றுப்பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன. அவற்றில் குழந்தைகளுக்கான பொருட்களான பால் போத்தல், பால் போசணி, சிறுவர்கள் விளையாடும் பொம்மைகள், குழந்தைகளுக்கான ஆடைகள், குழந்தைகளுக்கான பவுடர் தட்டு, கல்விச் சார்ந்த பொருட்களாகப் புத்தகப் பை, பாடசாலைப் பை, ஐக்கிய நாடுகள் அவையின் (UN) முத்திரை பதித்த பாடசாலைப் பை, ஆபரணங்கள் மற்றும் அணிகலன்களான மோதிரங்கள், வளையல்கள், மணிகள், தாயத்துக்கள், ஆடைகளின் எஞ்சிய பாகங்கள், மழை அங்கிகள், ஆடைகளில் பயன்படுத்தப்பட்ட சிறிய உலோகக் கொக்கிகள், இப்படி பல பொருட்கள் அடங்கும்.

ஐக்கிய நாடுகள் அவையின் (UN) முத்திரை பதித்த பாடசாலைப் பை யாழ்ப்பாணத்தில் 1996 காலப்பகுதியில் மாணவர்களுக்கு அந்த நிறுவனம் வழங்கியதாக அறிய முடிகிறது. இந்தத் தகவலைச் சரியாகப் பெற்றாலே அவர்கள் எந்தக் காலத்தில் படுகொலை செய்யப்பட்டனர் என்பதை அறியலாம்.

இவற்றுடன் சில உடல்கள் இருக்கையிலும், சில உடல்கள் கைகள் கட்டப்பட்டது போன்றும், சில உடல்கள் குழந்தையைத் தாய் அணைத்தவண்ணமும், பல உடல்கள் ஒரே குழியிலும் போடப்பட்டுள்ளன என செம்மணி புதைகுழி மீட்புக் காலத்தில் வந்த செய்திகள் தெரிவித்தன.

இப்படியாகப் பல சான்றுகள் இனப்படுகொலைக்கான ஆதாரங்களாக உள்ள நிலையில், பௌத்த சிங்கள ஆய்வாளர் எழுந்தமானமாகத் தொற்றுநோயால் இறந்தவர்களாக இருக்கலாம் எனக் கூறுவது யாரைக் காப்பாற்றுவதற்காக என்ற கேள்வி தமிழர்கள் மத்தியில் எழுந்துள்ளது. இலங்கையில் தொற்றுநோயால் நூற்றுக்கணக்கானவர்கள் எந்த ஆண்டிலும் இறந்ததாக நான் அறியவில்லை.

ஏதோ ஒரு புராதன நாணயத்தில் குறிப்பிடப்பட்ட ஆண்டை மையமாக வைத்து அந்த ஆண்டில் இந்த மரணங்கள் நடந்திருக்கலாம் எனப் புனைகதை கூறும் பேராசிரியர், அப்படியான நாணயக் குத்திகள் தமிழர்கள் வீடுகளில் பணம், நகைப் பெட்டிகளில் இருந்திருக்கலாம். இந்த நகை, பணத்தை எடுத்த இராணுவம் கூட தவறாக அல்லது தற்போது பாவனைக்குதவாத நாணயம் என்பதால் படுகொலை செய்து புதைத்த குழிகளில் வீசியிருக்கலாம். அதைக் கொண்டு காலத்தைத் தீர்மானிப்பது எந்த வகையில் சரியாக இருக்கும்?

தொடர்ச்சி: பக்கம் 13

உலகில் போர்கள் முடிவுக்கு வந்தாலும், அவற்றால் உருவாகும் காயங்கள் முடிவுக்கு வருவதில்லை. வெடிச்சத்தங்கள் ஓய்ந்த பிறகுதான் காணாமல் ஆக்கப் பட்டவர்களின் குடும்பங்கள் தங்கள் உறவுகளைத் தேடிக் கொண்டிருக்கின்றன. இடம்பெயர்ந்த மக்கள் இன்னமும் தமது நிலங்களுக்குத் திரும்ப முடியவில்லை. புதைகுழிகளிலிருந்து மீட்கப்படும் மனித எச்சங்கள், போர் முடிந்துவிட்டதாக அறிவிக்கப்பட்ட நாடுகளிலும் நீதிக்கான போராட்டம் தொடர்வதை உணர்த்துகின்றன. உலக அமைதியைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபை, இத்தகைய மக்களின் துயரங்களை அணுகும் விதம் என்பது பெரும் அவலமானது. உலக அரசியலில் மனித உரிமைகளைவிட அதிகாரமும் நலன்களும் முன்னிலைப்படுத்தப்படும்போது, ஒடுக்கப்பட்ட மக்கள் நீதிக்காக நீண்டகாலம் காத்திருக்க வேண்டிய நிலை உருவாகிறது.

ஐ.நா. தினம்: அமைதிக்கான வாக்குறுதியும் அதன் வரம்புகளும்

ஒக்டோபர் 24ஆம் திகதி ஐக்கிய நாடுகள் தினமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. இரண்டாம் உலகப் போரின் பேரழிவுகளுக்குப் பின்னர், உலகில் மீண்டும் அத்தகைய போர் நிகழாமல் தடுப்பதற்கும் நாடுகளுக்கிடையிலான அமைதியையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்கும் ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டது. 1945 ஜூன் 26ஆம் திகதி சான் பிரான்சிஸ்கோவில் ஐ.நா. சாசனம் கையெழுத்திடப்பட்டு, அதே ஆண்டு ஒக்டோபர் 24ஆம் திகதி முதல் அனுஷ்டிக்கப்படுகிறது. இன்று 193 நாடுகள் அதன் உறுப்பினர்களாக உள்ளன.

அமைதி, மனித உரிமைகள், சர்வதேச ஒத்துழைப்பு, மக்களின் பாதுகாப்பு ஆகியவை ஐ.நா.வின் அடிப்படை நோக்கங்களாக உள்ளன. பொதுச்சபை, பாதுகாப்புச் சபை, பொருளாதார மற்றும் சமூக மன்றம், சர்வதேச நீதிமன்றம், செயலகம் உள்ளிட்ட அமைப்புகள் அதன் பணிகளை முன்னெடுக்கின்றன. ஆனால் ஐ.நா. என்பது ஒரே அதிகார மையத்தைக் கொண்ட அமைப்பல்ல. பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வீட்டோ அதிகாரம், சர்வதேச நடவடிக்கைகளில் அரசியல் நலன்கள் எவ்வாறு தீர்மானிக்கும் சக்தியாக மாறுகின்றன என்பதையும் வெளிப்படுத்துகிறது. உலகின் பல்வேறு பகுதிகளில் மனித உரிமை மீறல்கள் நிகழும்போது, அவற்றைத் தடுக்க வேண்டிய சர்வதேச அமைப்புகளின் செயற்பாடுகள் அரசுகளின் ஒத்துழைப்பிலும் அரசியல் விருப்பத்திலும் சிக்கிக்கொள்கின்றன.

ஈழத் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம்

இலங்கைத்தீவில் தமிழர்களுக்கு எதிரான இன ஒடுக்குமுறை சுதந்திரத்துக்குப் பின்னர் பல்வேறு வடிவங்களில் தீவிரமடைந்தது. மொழி உரிமை மறுப்பு, அரசியல் பிரதிநிதித்துவத்தைப் பாதித்த நடவடிக்கைகள், கல்வி வாய்ப்புகளில் ஏற்பட்ட ஏற்றத்தாழ்வுகள், நிலப்பறிப்புகள், இனவழிப்புகள் எனத் தமிழர் வாழ்வின் பல தளங்களிலும் ஒடுக்குமுறை முடுக்கிவிடப்பட்டது. அகிம்சை வழியில் உரிமைகளைக் கோரிய தமிழர்களின் போராட்டங்கள் அரச வன்முறையால் எதிர்கொள்ளப்பட்ட பின்னணியில்தான் ஆயுதப் போராட்டம் உருவானது.

வடக்கு-கிழக்கில் வாழும் ஈழத் தமிழ் மக்கள் தமது தாயக உரிமை, அரசியல் சுயாட்சி, சுயநிர்ணய உரிமை ஆகியவற்றை வலியுறுத்தி நீண்டகாலமாகப் போராடி வருகின்றனர். சமாதானப் பேச்சுவார்த்தைகளும் அரசியல் உடன்பாடுகளுக்கான முயற்சிகளும் பல்வேறு காலங்களில் முன்னெடுக்கப்பட்டன. 2002ஆம் ஆண்டு போர்நிறுத்த உடன்பாட்டுக்குப் பின்னரும் அரசியல் தீர்வு எட்டப்படவில்லை. இறுதியில், இலங்கை அரசு இராணுவ வழியிலேயே ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வரும் அணுகுமுறையைத் தொடர்ந்தது. இதனால் உலகின் பங்களிப்புடன் 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்த பேரழிவு, ஈழத் தமிழ் மக்களின் வரலாற்றில் ஆறாத காயமாகப் பதிந்தது.

இறுதிப்போரில் ஐ.நா.வின் தோல்வி

முள்ளிவாய்க்காலில் பொதுமக்கள் கொல்லப்பட்டமை, மருத்துவமனைகள் தாக்கப்பட்டமை, பாதுகாப்பு வலயங்களில் மக்கள் சிக்குண்டமை, உணவு மற்றும் மருத்துவப் பொருட்களின் பற்றாக்குறை ஆகியவை குறித்து அக்காலத்திலும் பின்னரும் பல்வேறு அறிக்கைகள் வெளிவந்தன. போரின் இறுதிக்கட்டத்தில் நடந்த இனப் படுகொலைகளின் விடயத்தில், மனித உரிமை மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்ட மீறல்கள் நடந்ததாகவும் விசாரணை தேவைப்படுவதாகவும் ஐ.நா. நிபுணர் குழுவும் சுட்டிக்காட்டியது.

2012ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஐ.நா.வின் உள்மதிப்பீட்டு அறிக்கை, இலங்கையின் இறுதிப் போரின்போது ஐ.நா. அமைப்பு தனது மனிதாபிமான மற்றும் பாதுகாப்புப் பொறுப்புகளை நிறைவேற்றிய விதத்தில் கடுமையான குறைபாடுகள் இருந்ததை வெளிப்படுத்தியது. பொதுமக்கள் எதிர்கொண்ட பேரழிவைத் தடுப்பதில் ஐ.நா. போதுமான நடவடிக்கை எடுக்கவில்லை என்ற விமர்சனம் அந்த அறிக்கையில் முக்கியமாக இடம்பெற்றது. அப்போதைய செயலாளர் நாயகம் பான் கீ மூனும் ஐ.நா. தனது செயற்பாடுகளை மீளாய்வு செய்ய வேண்டியிருந்ததை ஏற்றுக்கொண்டார்.

உலக மக்களைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பு, முள்ளிவாய்க்காலில் மக்களின் உயிர்களைப் பாதுகாக்கத் தவறியபோது, அதன் பின்னர் நீதியை உறுதிப்படுத்துவதற்காக என்ன செய்தது? ஒரு உள்மதிப்பீட்டு அறிக்கையும் வருத்தமும் மட்டுமே அந்தப் பேரழிவுக்கான பதிலாக எப்படி இருக்க முடியும்?

சர்வதேச நீதி எங்கே?

இப்போது போர் முடிவடைந்து பதினேழு ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் காணாமல் ஆக்கப்பட்டவர்களின்

தீபச்செல்வன்

குடும்பங்கள் இன்னும் பதிலுக்காகக் காத்திருக்கின்றன. செம்மணிப் புதைகுழி போன்ற இடங்களில் அகழ்வுகள் தொடர்கின்றன. இனப்படுகொலை, போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் குறித்து நம்பகமான விசாரணைகளும் பொறுப்புக்கூறலும் இன்னும் நடக்கவேயில்லை.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை இலங்கை தொடர்பாகப் பல தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. முதலில், 2014ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானம் 25/1, நம்பகமான உள்ளக விசாரணைப் பொறிமுறை இல்லாத நிலையில், இலங்கையில் நிகழ்ந்ததாகக் கூறப்படும் கடுமையான மீறல்கள் குறித்து சர்வதேச விசாரணை முன்னெடுக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியது. அதன் பிறகும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. 2025ஆம் ஆண்டிலும் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

எனினும், தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதற்கும் அவற்றின் அடிப்படையில் நீதி நடைமுறைப்படுத்தப் படுவதற்கும் இடையில் நீண்ட இடைவெளி நிலவுகிறது. இலங்கை அரசு உள்ளக விசாரணைகளை முன்னெடுக்க முடியுமா என்ற சந்தேகம் தொடர்கின்றது. பாதிக்கப்பட்ட மக்களின் நம்பிக்கையைப் பெறக்கூடிய சுயாதீனமான நீதிப் பொறிமுறை உருவாக்க முடியாமை, அரசியல் விருப்பமின்மை, பேரினவாத அரசியலில் போரின் இருப்பு, சர்வதேச அரசுகளின் நலன்கள் ஆகியவை காரணமாக இலங்கை அரசால் உள்ளகச் சூழலில் பொறுப்புக்கூறலை நிகழ்த்த இயலாது.

செவிசாய்க்குமா ஐ.நா.?

நடந்த இனப்படுகொலை விடயத்தில் ஈழத் தமிழ் மக்கள் கோருவது பழிவாங்கலல்ல. தமது உறவுகள் எவ்வாறு கொல்லப்பட்டார்கள் என்பதையும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலை என்ன என்பதையும், குற்றங்களுக்குப் பொறுப்பானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்பதையுமே மக்கள் வலியுறுத்துகிறார்கள்.

ஐக்கிய நாடுகள் சபை தனது உருவாக்க நோக்கத்தை உண்மையாக நிறைவேற்ற வேண்டுமெனில், ஈழத் தமிழ் மக்களின் சர்வதேச விசாரணைக்கான கோரிக்கையை அரசியல் நலன்களின் அடிப்படையில் புறந்தள்ள முடியாது. நம்பகமான சர்வதேச விசாரணைப் பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும். ஆதாரங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்டவர்களின் சாட்சியங்கள் மதிக்கப்பட வேண்டும். தமிழர் தாயகத்தில் நீடிக்கும் அச்சம், இராணுவமயமாக்கல், காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை ஆகியவற்றுக்கு நீதியுடனான தீர்வு முன்வைக்கப்பட வேண்டும்.

தொடர்ச்சி: பக்கம் 13

மட்டு.நகரான்

மட்டக்களப்பு மாவட்டத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை(02 ஆம்திகதி) மாபெரும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 13 சிவில் அமைப்புகள் இணைந்துஇந்த அழைப்பினை விடுத்துள்ளது.இதுவரை காலமும் வெறும் கலந்துரையாடல்கள்,சந்திப்புகள் மூலம் மட்டுமே செயற்பாடுகளை முன்னெடுத்துவந்த சிவில் அமைப்புகள் முதன்முறையாக அனைத்தும் இணைந்து இந்த போராட்டத்திற்கு அமைப்பு விடுத்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் மிக நீண்டகாலமாக முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டம் மயிலத்தமடு,மாதவனை மேய்ச்சல் தரைப்போராட்டமாகும்.கடந்த காலத்திலிருந்த சிங்கள பௌத்த பேரினவாத அரசுகள் இந்த போராட்டங்களை சிங்கள மக்களுக்கு எதிரான போராட்டமாக மட்டுமே நோக்கியதே தவிர ஒரு இனத்தின் நிலவுரிமை,வாழும் ஊரிமை போராட்டமாக நோக்கவில்லை.

இதேபோன்று இந்த போராட்ட காலங்களில் அவர்களுடன் கலந்துரையாடல்களை முன்னெடுத்து அவர்களின் நியாயமான போராட்டத்தினை ஏற்றுக்கொண்ட தேசிய மக்கள் சக்தி என்னும் திரைமறைவில் பௌத்த மேலாதிக்கத்தினை தன்னுள் கொண்ட கட்சியினர் இன்று தமது உண்மை முகத்தினை வெளிப்படுத்திவருகின்றனர். இவ்வாறான நிலையிலேயே எதிர்வரும் திங்கட்கிழமை மாபெரும் கவன ஈர்ப்பு போராட்டம் ஒன்றுக்கான அழைப்புகள் விடுக்கப்பட்டுள்ளன.

மயிலத்தமடு, மாதவனைப்பிரச்சினையானது யுத்தம் முடிவடைந்த காலம் தொடக்கம் பண்ணையாளர்கள் எதிர்கொண்டுவரும் பாரிய பிரச்சினையாகும். மயிலத்தமடு மற்றும் மாதவனை மேய்ச்சல் தரைப் பகுதியானது, கிழக்கு மாகாணத்தில் உள்ள மட்டக்களப்பு மாவட்டத்தின் பரம்பரை கால்நடை வளர்ப்பை முதன்மை வாழ்வாதாரமாகக் கொண்ட பண்ணையாளர்களின் பொரு ளாதார அடித்தளமாகும்.

எனினும், கடந்த பல ஆண்டுகளாகவும் குறிப்பாய் கடந்த சில வருடங்களாகவும் இப்பகுதியில் இடம்பெற்று வரும் சட்டவிரோத நில ஆக்கிரமிப்புகள், மேய்ச்சல் நிலங்கள் அழிக்கப்படுதல், பண்ணையாளர்கள் மீதான வன்முறைகள் மற்றும் அச்சுறுத்தல்கள் அப்பகுதியின் இயல்பு வாழ்க்கையையும் சமூக நல்லுறவையும் கடுமையாகப் பாதித்துள்ளன.

மயிலத்தமடு மற்றும் மாதவனை பகுதிகள் வெறும் நிலப்பரப்புகள் மட்டுமல்ல அவை கால்நடைகளுக்குத் தேவையான மேய்ச்சல் வசதிகளை வழங்கி மாவட்டத்தின் பால் உற்பத்தி மற்றும் இறைச்சித் தேவைகளை 100 சதவீதம் பூர்த்தி செய்ய உதவும் முக்கிய வளங்களாகும்.

இருப்பினும், வெளி மாவட்டங்களிலிருந்தும் அத்துமீறி குடியேறிய பயிர்ச்செய்கையாளர்களாலும், சட்டவிரோத ஆக்கிரமிப்பாளர்களாலும் மேய்ச்சல் நிலங்கள் உழவப்பட்டு, தீவைத்து அழிக்கப்பட்டு வருகின்றன. இதனால் கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலம் இல்லாது போகவே, அவை விவசாயப் பயிர்நிலங்களுக்குள் நுழையும் சூழல் உருவாகி, பண்ணையாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் இடையே தேவையற்ற முரண்பாடுகள் எழுகின்றன.

அண்மைக் காலமாக பண்ணையாளர்கள் கடத்தப்பட்டுத் தாக்கப்படுவதும், துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு பசுக்களும் கால்நடைகளும் கொல்லப்படுவதும் தொடர்கதையாகி உள்ளதுடன், வன இலாகா மற்றும் பொலிஸ் அதிகாரிகளின் ஒருதலைப்பட்சமான நடவடிக்கைகள் காரணமாக பண்ணையாளர்கள் பெரும் சட்டப் போராட்டங்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் ஆளாகியுள்ளனர்.

இப்பிரச்சனை தொடர்பாக நீதிமன்றங்கள் பண்ணையாளர்களுக்கு ஆதரவாகவும், அத்துமீறிய ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றுமாறும் உத்தரவுகளை வழங்கியுள்ளன. மேலும், ஜனாதிபதி முதல் மாவட்ட நிர்வாக அதிகாரிகள் வரை பல பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வாக்குறுதிகள் அளிக்கப்பட்ட போதிலும், அவை எதுவுமே நடைமுறைப்படுத்தப்படவில்லை.

நீதிமன்றத் தீர்ப்புகள் புறக்கணிக்கப்பட்டு, சட்டத்தின் ஆட்சி கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளதாகச் சிவில் சமூக அமைப்புகள் சுட்டிக்காட்டுகின்றன. அரசாங்கத்தின் இத்தகைய மெத்தனப்போக்கு, மாவட்டத்தின் சுற்றுச்சூழல் சமநிலை, கால்நடை வளம், விவசாய உற்பத்தி மற்றும் ஒட்டுமொத்தப் பொருளாதாரத்திலும் நீண்டகாலப் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

இப்பிரச்சனைக்குத் தீர்வாக, மயிலத்தமடு-மாதவனை மேய்ச்சல் தரை தொடர்பாக நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகளையும் உத்தரவுகளையும் அரசு உடனடியாகச் சட்டரீதியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்படுகிறது. மேலும், மயிலத்தமடு-மாதவனை உள்ளிட்ட கிழக்கு மாகாணத்தின் அனைத்து மேய்ச்சல் நிலங்களையும் பாதுகாத்து, அவற்றின் பயன்பாட்டை உறுதிசெய்யும் வர்த்தமானி பிரகடனத்தை வெளியிட வேண்டும்.

மேய்ச்சல் நிலங்களில் இடம்பெற்றுள்ள சட்ட

விரோத நில ஆக்கிரமிப்புகள் குறித்து நடுநிலையான விசாரணை நடத்தி ஆக்கிரமிப்பாளர்களை உடனடியாக வெளியேற்றுவதுடன், கால்நடைகள் சுட்டுக்கொல்லப்பட்டமை மற்றும் பண்ணையாளர்கள் தாக்கப்பட்டமை போன்ற குற்றங்களுக்குப் பொறுப்பானவர்களைக் கண்டறிந்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். அதேபோல் பண்ணையாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் இடையே முரண்பாடுகள் ஏற்படாத வகையில் இருதரப்பு வாழ்வாதாரத்தையும் பாதுகாக்கும் நிரந்தரத் திட்டத்தை உருவாக்க வேண்டும்.

ஆக்கிரமிப்பாளர்களால் கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலம் இல்லாது போவதோடு, விவசாய நிலங்களுக்கும் கால்நடைகளுக்கும்இடையேமுரண்பாடுகள்செயற்கையாக உருவாக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அண்மைக்காலமாகப் பண்ணையாளர்கள் அச்சுறுத்தப்படுவதுடன், துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு பசுக்கள் கொல்லப்படுவதும் தொடர்கதையாகியுள்ளது. மேலும், வாடிகளில் தங்கியிருக்கும் பண்ணையாளர்களைக் கடத்திச் சென்று தாக்குவது, சட்டவிரோத மின்வேலிகளை அமைத்து கால்நடைகளைச் சாகடிப்பதாக மிரட்டுவது போன்ற அத்துமீறல்கள் தொடர்கின்றன.

நீதிமன்றங்கள் பண்ணையாளர்களுக்கு ஆதரவாகத் தீர்ப்பு வழங்கி, ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றுமாறு உத்தரவிட்ட போதிலும், அரச அதிகாரிகளோ பொலிஸாரோ நீதிமன்ற உத்தரவுகளை முறையாக நடைமுறைப்படுத்தவில்லை எனப் பண்ணையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். தாக்குதலுக்குள்ளான பண்ணையாளர்கள் பொலிஸில் புகார் அளித்த போதிலும், குற்றவாளிகளுக்கு சாதகமாகவே நடவடிக்கைகள் அமைவதாக பண்ணையாளர் சங்கத்தின் தலைவர் குற்றம் சுமத்தினார். அரசாங்க அதிபர், அமைச்சக்கள் மற்றும் மகாவலி அதிகாரசபை ஆகியவை மேய்ச்சல் நிலத்திற்கான பாதுகாப்பை உறுதி செய்வதாக அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிவிட்டதாகச் சிவில் சமூகப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இப்பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காணவும், சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்தவும், வரும் நவம்பர் 2ஆம் திகதி திங்கட்கிழமை மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இப்போராட்டத்திற்கு கிழக்கு மாகாண சிவில் சமூக

செயல்பாட்டாளர் ஒன்றியம், அறம் அமைப்பு, மட்டக்களப்பு மாவட்டக் கால்நடை கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், மயிலத்தமடு மாதவனை கமலநல அமைப்பு, கமலக்கார அமைப்புகளின் மாவட்ட அதிகார சபை, கிழக்கு மாகாண மீனவ தொழிற்சங்கம், மண்முனை மேற்கு விவசாயச் சம்மேளனம், மட்டு ஊடக அமையம், கிழக்கு மாகாண இந்து குருமார்கள் ஒன்றியம், மதத் தலைவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் தங்களின் பூரண ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

இது ஒரு தனிப்பட்ட தரப்பினருக்கான போராட்டம் அல்ல. கிழக்கு மாகாணத்தின் நிலவளம், உணவுப் பாதுகாப்பு, மனித உரிமைகள் மற்றும் எதிர்காலத் தலைமுறையின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்கான ஒருங்கிணைந்த போராட்டமாகும். இப்போராட்டத்தில் சாதி, மத, அரசியல் வேறுபாடுகளைக் கடந்து பொதுமக்கள், இளைஞர்கள், வர்த்தகர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் அனைவரும் பெருந்திரளாகப் பங்கேற்று நீதிக்காகக் குரல்கொடுக்க வேண்டும் என அமைப்பாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

இது ஒரு தனிப்பட்ட பிரிவினருக்கான போராட்டம் அல்ல கிழக்கு மாகாணத்தின் நிலவளம், உணவுப் பாதுகாப்பு, மனித உரிமைகள் மற்றும் எதிர்காலத் தலைமுறையின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்கான ஒருங்கிணைந்த போராட்டமாகும். எனவே, இப்போராட்டத்தில் சாதி, மத, அரசியல் வேறுபாடுகளைக் கடந்து பொதுமக்கள், இளைஞர்கள், வர்த்தகர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் அனைவரும் பெருந்திரளாகப் பங்கேற்று நீதிக்காகக் குரல்கொடுக்க வேண்டும் என அமைப்பாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

• • •

மருதன் ராம்

இலங்கைத் தீவின் வரலாற்றில் இயற்கையின் கோரத் தாண்டவம் மனித உயிர்களைப் பலிகொண்ட துயர நாட்களில், 2014ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 29ஆம் திகதி பதுளை மாவட்டம், கொஸ்லந்த மீரியபெத்தப் பகுதியில் நிகழ்ந்த பாரிய மண்சரிவு அனர்த்தம் என்றென்றும் ஆறாத வடுவாய் மனதில் நிலைத்து நிற்கும். கண் இமைக்கும் விநாடிக்குள் ஒரு முழு கிராமத்தையும், அங்கு வாழ்ந்த அப்பாவி மக்களின் கனவுகளையும், சிரிப்புக்களையும் மண்ணுக்குள் புதைத்துச் சென்ற அந்தப் பேரழிவு நடந்து கடந்த 29ஆம் திகதியுடன் 12 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன.

ஆனால், இந்த 12 ஆண்டுகளில் அந்த மண்ணின் மக்களது கண்ணீரும், வாழ்வாதாரத் தேடலும் மாறியிருக்கிறதா? நாட்காட்டிகள் மட்டுமே மாறியிருக்கின்றனவே தவிர, மீரியபெத்த எஞ்சிய குடும்பங்களின் துயரமும், ஒட்டுமொத்த மலையகச் சமூகத்தின் அடிப்படை உரிமைகளுக்கான போராட்டமும் இன்றும் அதே புள்ளியில்தான் தொடர்கிறது. அரசியல் மேடைகளில் முழங்கப்பட்ட வாக்குறுதிகளும், நிவாரண அறிவிப்புகளும் தற்காலிகத் தீர்வுகளாகவே கடந்துபோயுள்ளன.

அன்று அந்தச் சோகச் செய்தி நாட்டை உலுக்கிய போது, ஒட்டுமொத்த நாடும் மீரியபெத்தையை நோக்கித் திரும்பியது. தேயிலைத் தோட்டங்களில் வியர்வை சிந்தி உழைத்துத் தமக்கென ஒரு சிறிய கூரையை அமைத்து வாழ்ந்த தொழிலாளர் குடும்பங்கள், பெருமழையின் காரணமாக மலையடுக்கு சரிந்து விழுந்ததில் நிலத் தோடு நிலமாய் புதைந்து போயினர். பல உடல்கள் மீட்கப் படாமலேயே மண்ணுக்குள் உறங்கிப் போயின.

அந்த அனர்த்தத்தின் தழும்பு மீரியபெத்த மட்டு மல்லாமல், இலங்கைத் தேயிலையின் முதுகெலும்பாக விளங்கும் ஒட்டுமொத்த மலையக மக்களின் பாதுகாப் பற்ற வாழ்வியலை உலகிற்கு உரக்கச் சொன்னது. மலைப் பிரதேசங்களில் உள்ள தேயிலைத் தோட்டப் பகுதிகள், குறிப்பாக லயன் குடியிருப்புகள் எந்தளவுக்கு இயற்கை அனர்த்தங்களுக்கு முகம் கொடுக்க முடியாத பலவீனமான கட்டமைப்பில் உள்ளன என்பதை அந்தப் பேரழிவு கோரமான வெளிச்சத்தில் காட்டியது.

மீரியபெத்த மண்சரிவு நிகழ்ந்து ஒரு தசாப்தத்திற்கும் அதிகமான காலம் கடந்த நிலையிலும், பாதிக்கப்பட்ட அனைத்துக் குடும்பங்களுக்கும் முறையான, பாதுகாப்பான நிரந்தர வீடுகள் முழுமையாக வழங்கப்பட்டுள்ளனவா என்ற கேள்விக்கு இன்றுவரை நேர்மறையான பதில் இல்லை. அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுப் பரிதவித்த மக்களில் ஒரு பகுதியினருக்கு மாத்திரமே மாற்று வீடுகள் கிடைக்கப்பெற்றன. ஆனால், எஞ்சிய சில குடும்பங்கள் இன்னமும் தற்காலிகக் கொட்டில்களிலும், உறவினர்களின் வீடுகளிலும், பாதுகாப்பற்ற சூழலிலுமே வாழ்க்கையைத் தள்ளிக் கொண்டிருக்கின்றனர்.

தம் கண் முன்பாகவே உறவினர்களை இழந்து இருந்த வீடுகளையும் உடைமைகளையும் இழந்து நிர்க்கதியாய் நின்ற அந்த மக்களுக்கு, 12 ஆண்டுகள் கடந்தும் ஒரு நிரந்தர வீட்டை முழுமையாகப் பெற்றுக்கொடுக்க முடியாமல் போனது இலங்கை ஆட்சி அமைப்புகளின் மெத்தனப் போக்கையே காட்டுகிறது. இயற்கையினால் பாதிக்கப்பட்ட மனிதர்களை, காலத்தின் அலட்சியம் இரண்டாம் முறையும் சிதைத்துக் கொண்டிருக்கிறது என்பதே கசப்பான உண்மையாகும்.

மீரியபெத்த துயரம் என்பது ஒரு தனிப்பட்ட கிராமத்தின் பிரச்சினை மட்டுமல்ல; அது ஒட்டுமொத்த மலையகத் தமிழ்ச் சமூகத்தின் பல நூற்றாண்டு கால வரலாற்று வஞ்சகத்தின் ஒரு வெளிப்பாடாகும். பிரித்தானியர்களால் தேயிலைத் தோட்டத் தொழிலுக்காக அழைத்து வரப்பட்டு, இந்த நாட்டின் பொருளாதாரத்தின் பெருமூச்சாக விளங்கிவரும் மலையக மக்கள், இந்த மண்ணிற்கு வந்து 200 ஆண்டுகள் கடந்துவிட்டன. இருப்பினும், இன்றும் அவர்களுக்குரிய அடிப்படை உரிமைகளான முறையான காணி உரிமை, பாதுகாப்பான வீட்டுரிமை, முழுமையான குடியுரிமை மற்றும் சிவில் உரிமைகள் என்பன முழுமையாக உறுதிப்படுத்தப்படாத நிலை தொடர்கிறது. பிரிட்டிஷ் காலத்தில் உருவாக்கப்பட்ட குறுகிய 'லயன்' அறைகளில் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வரும் இவர்களது சந்ததிகள், இன்றும் தங்களுக்கென சொந்தமாக ஒரு துண்டு நிலமோ அல்லது நிரந்தர வீடோ இல்லாதவர்களாகவே தள்ளப்பட்டுள்ளனர்.

தேர்தல் கால வாக்குறுதிகளும், ஏமாற்றப்படும் எளிய மக்களும்

இலங்கையின் தேர்தல் கால அரசியல் மேடைகளில் மலையக மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக அள்ளி வீசப்படும் வாக்குறுதிகள் ஏராளம். “காணி உரிமை வழங்கப்படும்”, “நவீன வசதிகளுடன் கூடிய வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும்”, “மலையக மக்கள் நாட்டின் பிரதான நீரோட்டத்துடன் இணைக்கப்படுவார்கள்” என்றவாறு தேர்தல் நெருங்கும் வேளைகளில் காதுகளில் தேன் வந்து பாய்ச்சும். ஆனால், வாக்குப்பெட்டிகள் மூடப்பட்டு தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டவுடன், இந்த வாக்குறுதிகள் காற்றில் பறக்கவிடப்படுகின்றன.

மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் அரசாங்கங்களும், அரசியல் பிரதிநிதிகளும் காட்டும் மெத்தனமும் தாமதமும், மலையக மக்களை இரண்டாம்தரக்குடிமக்களாகவே தொடர்ந்தும் நடத்துகின்றதோ என்ற நியாயமான சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. இலங்கையை தாக்கும் பலத்த இயற்கை அனர்த்தங்கள் மற்றும் தொடர்ச்சியான பருவமழைக் காலங்கள், மலையக மக்களை மீண்டும் மீண்டும் அச்சுறுத்தி வருகின்றன.

மழை தீவிரமடையும் போது பாதுகாப்பு காரணங்களுக்காக முகாம்களுக்கோ அல்லது பாடசாலைகளுக்கோ வெளியேற்றப்படும் மக்கள், மழை குறைந்தவுடன் மீண்டும் அதே மண்சரிவு அபாயமுள்ள, விரிசல்விட்ட ஆபத் தான வீடுகளுக்கே திரும்பத் தள்ளப்படுகின்றனர். நிரந்தரமான பாதுகாப்புப் பிரதேசங்களில் மீள்குடியேற்றம் செய்யப் படாமையால், ஒவ்வொரு ஆண்டும் மழைக்காலம் என்பது இந்த மக்களுக்குச் சித்திரவதைக் காலமாகவும், வாழ்வுக்கும் சாவுக்கும் இடையிலான போராட்டமாகவும் மாறிவிட்டது.

ஹப்புத்தளை நகரில் மக்களின் ஆவேசக் குரல்

இத்தகைய தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்கும், அரசாங்கத்தின் மௌனத்திற்கும் எதிராக, கொஸ்லந்த மீரியபெத்த மண்சரிவு அனர்த்தத்தின் 12ஆம் ஆண்டு நிறைவு நாளான கடந்த 29ஆம் திகதி தோட்டத் தொழிலாளர் மத்திய நிலையத்தின் ஏற்பாட்டில் ஹப்புத்தளை நகரில் மாபெரும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட நூற்றுக் கணக்கான தோட்டத் தொழிலாளர்களும், பொதுமக்களும் முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து முழக்கங்களை எழுப்பினர். “கொடுத்த வாக்குறுதிகளை உடனடியாக நிறை வேற்று!”, “மீரியபெத்த உட்பட அனர்த்தத்தால் பாதிக் கப்பட்ட அனைத்து மக்களுக்கும் காணி உரிமையை வழங்கு”, “எஞ்சிய குடும்பங்களுக்கு துரிதமாக நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடு”, “மலையக மக்களின் காணி உரிமை, வீட்டுரிமை மற்றும் சிவில் உரிமைகளை முழுமையாக உறுதிப்படுத்து” போன்ற வாசகங்களுடன் கைகளில் பதாகைகளை ஏந்தியவாறும், கோஷங்களை எழுப்பியவாறும் அவர்கள் நடத்திய இந்தப் போராட்டம், ஆட்சியாளர்களின் மனங்களில் மாற்றத்தை ஏற்படுத்துமா என்ற கேள்வியுடன் மலையக மக்களின் நீண்ட போராட்ட

வரலாற்றில் மற்றொரு பதிவாக இணைந்துள்ளது.

இன்றைய காலகட்டத்தில், இலங்கையில் புதிய அரசாங்கங்களும் அதிகார சபைகளும் மலையக மக்களுக் கான காணி உறுதிகள் மற்றும் வீட்டுரிமை வழங்கும் திட்டங்கள் குறித்துப் பேசினாலும், கள யதார்த்தத்தில் நடைமுறைப்படுத்தலில் உள்ள தாமதங்கள் மக்களின் கோபத்தை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளன. வெறும் வெற்றுப் பத்திரங்களை வழங்குவதோ அல்லது தேர்தல் காலத்தில் மட்டும் திட்டங்களை அறிவித்துவிட்டு மௌனிப்பதோ இப்பிரச்சினைக்குத் தீர்வாகாது.

மலையகப் பெருந்தோட்டக் காணிகளைச் சட்ட ரீதியாகப் பகிர்ந்தளிப்பதிலும், தோட்டத் தொழிலாளர்களை நாட்டின் உரிமம் பெற்ற நில உடைமையாளர்களாக மாற்றுவதிலும் அரசாங்கம் துணிச்சலான கொள்கை முடிவுகளை எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

கொஸ்லந்த மீரியபெத்த மண்சரிவு அனர்த்தம் நடந்து 12 ஆண்டுகள் கடந்துவிட்டன என்பது வெறும் கால ஓட்டத்தின் கணக்கல்ல; அது பன்னிரெண்டு ஆண்டுகளாக நீதி கிடைக்காமல் தவிக்கும் மனிதர்களின் கண்ணீரின் கணக்காகும். ஒரு நாட்டின் பிரஜைகள் தமது சொந்த நிலத்தில் பாதுகாப்பான கூரையுடன் வாழ்வதற்கான உரிமை மறுக்கப்படும் வரை, அந்த நாட்டின் வளர்ச்சியும் மனித உரிமைகளும் முழுமை பெறாது.

மீரியபெத்த எஞ்சிய குடும்பங்களின் வீடமைப்புப் பிரச்சினைக்கும், ஒட்டுமொத்த மலையக மக்களின் நில உரிமைப் போராட்டத்திற்கும் இனியும் காலம் தாழ்த்தாமல் உடனடியான, வெளிப்படையான, நிரந்தரத் தீர்வினை வழங்குவதே இந்த நாட்டு அரசாங்கத்தின் தார்மீகக் கடமையாகும்.

• • •

பா.புகழேந்தி
ஈழஅகதிகள்பாதுகாப்புக் குழு

இலங்கையில் 83 கருப்பு ஜூலைக்குப் பின்பு பல ஈழத் தமிழர்கள் குடும்பம் குடும்பமாக தங்களுடைய உடைமைகளை விட்டுவிட்டு தமிழ்நாட்டிற்கு அகதியாக வந்தார்கள். அவ்வாறு வந்தவர்களை தமிழக அரசு மண்டபம் முகாமில் பதிவு செய்து கொண்டு பல்வேறு இடங்களில் தங்க வைத்தனர்.

கிட்டத்தட்ட தமிழகத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட முகாம்கள் உள்ளன. தற்போது இந்த முகாம்களில் கிட்டத்தட்ட 80 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஈழத்தமிழர்கள் வசிக்கிறார்கள். இந்த முகாம்கள் பல்வேறு மாவட்டங்களில் பரவலாக அமைக்கப்பட்டுள்ளன.

அதேபோல விமானத்தின்வழியாக தமிழகத்திற்கு வந்து தமிழகத்தில் இருக்கக்கூடிய காவல் நிலையத்தில் பதிவு செய்து கொண்டு கிட்டத்தட்ட சுமார் 70 ஆயிரம் ஈழத் தமிழர்கள் வசிக்கிறார்கள்.

தமிழகத்தில் முகாம்களில் இருக்கக்கூடிய ஈழத் தமிழர்களுக்கு எந்தவித உரிமையும் வழங்கப்படவில்லை. அவர்கள் அசையா சொத்துக்கள் மற்றும் வாகனங்கள் தங்களுடைய பெயரில் வாங்க முடியாது. அவ்வாறு தமிழகத்திற்கு அகதியாக வந்தவர்கள் கிட்டத்தட்ட 20 ஆண்டுகள், 30 ஆண்டுகள், 40 ஆண்டுகளாக இந்த மண்ணிலே வாழ்கிறார்கள். அவர்களுக்கு இதுவரை குடியுரிமை கொடுப்பதற்கு இந்திய அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அதைவிட கொடுமையான விடயம் என்னவென்றால் தமிழின உணர்வு பேசக்கூடிய தமிழக கட்சிகள் கூட தங்களுடைய பாராளுமன்ற உறுப்பினர்களை வைத்து அல்லது சட்டமன்ற உறுப்பினர்களை வைத்து இந்திய அரசிற்கு ஒரு நெருக்கடியை கூட ஏற்படுத்தவில்லை. கடந்த 2019ல் இந்திய அரசு குடியுரிமைச் சட்டத்தில் ஒரு திருத்தம் கொண்டு வந்தது. அதில் இந்தியாவிற்குள் வந்த பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த இந்துக்கள், கிறிஸ்தவர்கள், பார்சிகள், சீக்கியர்கள் ஆகியோருக்கு குடியுரிமை வழங்கப்படும் என்று கூறி குடியுரிமைச் சட்டத்தில் திருத்தத்தையும் கொண்டு வந்து விட்டார்கள்.

ஆனால் இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு வந்த ஈழத்தமிழர்களுக்கு குடியுரிமை வழங்கப்படவில்லை. இதில் தொடர்பாக தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய எந்த அரசியல் கட்சிகளும் இந்த கோரிக்கையை வலியுறுத்தி பாராளுமன்றத்தில் பேசவில்லை. தனது 'தொப்புள் கொடி உறவு' என்று நம்பி வந்த ஈழத்தமிழர்கள் தற்போதுதாத்தா, மகன், பேரன் என்று கிட்டத்தட்ட மூன்று தலைமுறைக்கு மேலாக தமிழகத்திலே வசிக்கிறார்கள்.

அவர்களின் வசிப்பிடம் மிக ஒரு மோசமான வசிப்பிடமாக இன்றைக்கும் இருக்கிறது. அவர்களை சட்டவிரோத குடியேறிகள் என்று தான் இந்திய அரசு அழைக்கிறது. ஈழத்தில் இருந்து புலம்பெயர்ந்து ஒருவர் வெளிநாட்டிற்குச் சென்று அங்கு அவரால் குடியுரிமை பெற முடிகிறது. அந்த நாட்டில் அரசு பதவி பெற முடிகிறது. வழக்கறிஞராக முடிகிறது, அமைச்சராக முடிகிறது.

ஆனால் தமிழ்நாட்டில் வந்த ஈழத்தமிழர்கள் 30 ஆண்டுகளுக்கு மேலாக இங்கு இருந்தாலும் அவர்களுக்கு எந்தவித உரிமையும் இல்லாதவர்களாக ஒரு குற்றப் பரம்பறையினரை போல இங்கு இருக்கக்கூடிய காவல் துறையினரால், அரசால் நடத்தப்படுகிறார்கள். யாரேனும் ஒரு தவறு செய்தால் அல்லது ஒரு குற்றத்தில் ஈடுபட்டால் காவல்துறை அவர்களை கைது செய்து அவர்களை சிறையில் அடைக்கிறது என்று வைத்துக் கொண்டால் அவர்கள் பிணையில் வந்த பின்பு அவர்களை பிடித்து சிறப்பு முகாமில் அடைத்து விடுகிறார்.

இந்த சிறப்பு முகாம் என்பது முன்பு சிறையாக இருந்த ஒரு இடம். இதற்கு முன்பு பல்வேறு சிறப்பு முகாம்கள் தமிழகத்தில் இருந்தன. தற்போது ஒரே ஒரு சிறப்பு முகாம் திருச்சியில் இருக்கிறது. இந்த முகாமில் தற்போது நூற்றுக்கும் மேற்பட்ட ஈழத் தமிழர்கள் அடைத்து வைக்கப்பட்டு இருக்கிறார்கள் அவர்களில் 11 பெண்களும் அடங்குவர்.

உமாரமணன் என்பவர் 10 ஆண்டுகளுக்கு மேலாக அந்த முகாம்களில் அடைக்கப்பட்டிருக்கிறார். சுதா என்கிற பெண்மணி ஆறு ஆண்டுகளுக்கு மேலாக அந்த முகாமில் அடைக்கப்பட்டிருக்கிறார். இந்த முகாமில் இருப்பவர்களுடைய வழக்குகள் விரைந்து முடிக்கப்படாமல் காலதாமதப்படுத்தப்படுகிறது. பலர் வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டவர்களும் இருக்கிறார்கள்.வழக்கிலே தண்டனை அடைந்து தண்ட னையை முடித்தவர்களும் இந்த சிறப்புமாக முகாமில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் பலர் தங்களது தாயகத்துக்கு திரும்ப விரும்புகிறார்கள், ஆனால் தமிழக அரசு அவர்களை அனுப்பாமல்காலம்கடத்திவருகிறது. அதே நேரம் தங்களது தாயகத்திற்கு சென்றால் இலங்கை காவல்துறையால் தாங்கள் துன்புறுத்தப்பட்படுவோம்எனசிலர்கூறுகிறார்கள்.

அவ்வாறு அடைக்கப்பட்டவர்களில் கிருஷ்ணகுமாரும் சுபாஷ்கரனும் அடங்குவர். இவர்கள் இலங்கையில் விடுதலை புலிகளை மீள் உருவாக்கம் செய்வதற்கு முயற்சி எடுத்தார்கள் என்று ஒரு குற்றச்சாட்டு தமிழக கியூ பிரிவு காவல் துறையால் பொய்யாக போடப்பட்டது. விசாரணை நீதிமன்றம் இவர்களுக்கு 10 ஆண்டு தண்டனை வழங்கியது மேல்முறையீட்டுலே அந்த தண்டனை ஏழு ஆண்டுகளாக உயர்நீதிமன்றம் குறைத்தது. இதே வழக்கிலே கைது செய்யப்பட்ட ஸ்ரீ என்பவர் ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் இருந்தார். அவருக்கு விசாரணை நீதிமன்றம் தண்டனை வழங்கியது. உயர்நீதிமன்றம் தண்டனையை உறுதி செய்தது. ஆனால் உச்சநீதிமன்றம் இந்த வழக்கில் 'ஸ்ரீ' என்பவர் குற்றவாளி இல்லை வேறு ஒரு நபருக்காக இவரை கைது செய்து சிறையில் அடைத்திருக்கிறார்கள் என்று உச்சநீதிமன்றம் கூறியிருக்கிறது.

இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் கியூ பிரிவு தொடர்ச்சியாக ஈழத் தமிழர்களை துன்புறுத்துவதற்காக பல்வேறு பொய் வழக்குகளை போட்டு வருகிறார்கள். அந்த வகையில் தான் கிருஷ்ணகுமார். சுபாஸ்கரன் ஆகியோர் மீது போட்ட வழக்கு ஒரு பொய் வழக்கு அதைவிட கொடுமை என்னவென்றால் அவர்களை வலுக்கட்டாயமாக இலங்கைக்கு கடத்த நாடு கடத்த முயற்சி செய்த செயல். கடந்த 26 ஆம் தேதி காலை 11 மணிக்கு திரளான காவல்துறையினரை முகாமிற்குள் கொண்டு வந்து கிருஷ்ணகுமாரை வலுக்கட்டாயமாக இழுத்துச் சென்று திருச்சி விமான நிலையத்தின் ஊடாக கொழும்புக்கு கூட்டிச் சென்று இலங்கை காவல்துறையிடம் ஒப்படைத்துள்ளனர் இது அப்பட்டமான மனித உரிமை மீறிய செயல்.

இன்றைக்கு தமிழகத்தில் சிறப்பு முகாமில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் அடைத்து வைக்கப்பட்டு இருக்கிறார்கள் அவர்களை விடுவிப்பதற்கும், முகாம்களிலே வசிக் கக்கூடிய ஈழத் தமிழர்களுக்கும், முகாமை விட்டு வெளியே காவல் நிலையத்தில் பதிவு செய்து கொண்டு வாழ்ந்து வருகிற ஈழத் தமிழர்களுக்கும் இந்திய அரசு குடியுரிமைகொடுக்க வேண்டும் என்ற அழுத்தத்தை சர்வதேச ஐக்கியநாடுகள் மன்றத்தில் உலகத் தமிழர்கள் ஒரு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

• • •

யாழ்ப்பாணம், தமிழ் ஈழத்தில் உள்ள செம்மணி மண்ணுக்கு அடியில் புதைந்து கிடக்கும் மனித எச்சங்கள், பல தசாப்தங்களாக நீடிக்கும் கட்டாயக் காணாமல் ஆக்கப்படல்கள், சட்டத்திற்குப் புறம்பான படுகொலைகள் மற்றும் சர்வதேச சட்டத்தின் கடுமையான மீறல்கள் குறித்த விடைகளுக்கான சான்றுகளைக் கொண்டிருக்கக்கூடும். குழந்தைகள் மற்றும் கைக்குழந்தைகள் உட்பட நூற்றுக்கணக்கான மனிதர்களின் எச்சங்கள் கண்டறியப்பட்டிருப்பது, இலங்கையின் உள்நாட்டு பொறுப்புக்கூறல் பொறிமுறைகளின் பெரும் தோல்வியையும், நீதிக்கான தனது தொடர்ச்சியான வாக்குறுதிகளைச் செயலுள்ள சட்ட நடவடிக்கைகளாக மாற்ற சர்வதேச சமூகம் கொண்டுள்ள தயக்கத்தையும் மீண்டும் ஒருமுறை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்துள்ளது.

19 அக்டோபர் 2026 அன்று யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மூன்றாவது இடைக்கால தொல்பொருள் ஆய்வறிக்கையில், குறைந்தது 574 நபர்களின் எச்சங்கள் கண்டறியப்பட்டதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆரம்ப மதிப்பீடுகளின்படி, இதில் 41 சதவீதத்தினர் குழந்தைகளும், 22 சதவீதத்தினர் கைக்குழந்தைகளும் ஆவர். அதனைத் தொடர்ந்து வந்த தகவல்களின்படி, அகழ்வாராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்ட எச்சங்களின் எண்ணிக்கை 583 ஆக உயர்ந்துள்ளது. இவ்வளவு பெரிய அளவிலான கண்டுபிடிப்புகள் நிகழ்ந்திருந்தும், உயிரிழந்தவர்கள் யார், அவர்களின் மரணத்திற்கான காரணங்கள் என்ன, அவர்கள் எவ்வாறு புதைக்கப்பட்டனர் என்பது போன்ற கேள்விகளுக்கு இன்னும் விடை கிடைக்கவில்லை.

குறிப்பாக, இந்த இடைக்கால அறிக்கையில், இந்த மரணங்கள் ஏதேனும் ஒரு தொற்றுநோய் அல்லது இயற்கை பேரிடரால் நிகழ்ந்திருக்கலாம் என்று குறிப்பிடப்பட்டிருப்பது மிகுந்த கவலையளிக்கிறது. ஆனால், இத்தகைய விளக்கங்களை உறுதிப்படுத்தும் வகையில் வரலாற்றுச் சான்றுகளோ அல்லது தடயவியல் முடிவுகளோ எதுவும் இல்லை.

மாற்று ஊகங்களை ஆராய்வதில் தவறில்லை; அறிவியல் ஆய்வுகள் அனைத்து நியாயமான சாத்தியக் கூறுகளையும் பரிசோதிக்க வேண்டும். ஆனால், சுதந்திரமான தடயவியல் மற்றும் நீதித்துறை ஆய்வுக்கு உட்படுத்தும் போது, அதற்குத் தேவையான ஆதாரங்கள் ஏதுமின்றி இத்தகைய விளக்கங்கள் முன்வைக்கப்படுகின்றனவா என்பதுதான் கவலைக்குரிய விஷயமாகும்.

1990-களில் யாழ்ப்பாணத்தில் இலங்கை இராணுவம் மேற்கொண்ட நடவடிக்கைகள், அங்கு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட கட்டாயக் காணாமல் ஆக்கப்படல்கள், மற்றும் தமிழ் பொதுமக்கள் சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டு, கொல்லப்பட்டு, அப்பகுதியில் புதைக்கப்பட்டனர் என்ற நீண்டகாலக் குற்றச்சாட்டுகளிலிருந்து பிரித்து, செம்மணி விவகாரத்தை அணுக முடியாது.

1998-ல் இலங்கை இராணுவ வீரர் சோமரத்ன ராஜபக்ச, செம்மணியில் நூற்றுக்கணக்கான தமிழ் பொதுமக்கள் புதைக்கப்பட்டதாக சாட்சியமளித்ததைத் தொடர்ந்து, இந்த இடம் சர்வதேச அளவில் அறியப்பட்டது. அதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள், இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பான முழுமையான பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்தவில்லை.

எனவே, தற்போது மீண்டும் கண்டறியப்பட்டுள்ள இந்த எச்சங்கள், தொல்பொருள் ஆய்வைத் தாண்டிய மிக முக்கியமான கேள்விகளை எழுப்புகின்றன. சர்வதேச மனித உரிமைகள் சட்டம், சர்வதேச மனிதாபிமான சட்டம், சர்வதேச குற்றவியல் சட்டம் மற்றும் கடுமையான மீறல்களுக்கான பொறுப்புக்கூறலை நிர்வகிக்கும் சர்வதேச சட்டக் கட்டமைப்பு ஆகியவற்றின் அடிப்படைக் கோட்பாடுகளை அவை உள்ளடக்குகின்றன.

செல்வி
ரேணுகா இன்பக்குமார்
வழக்கறிஞர்
நியூசவுத்வேல்ஸ், அவுஸ்திரேலியா

இலங்கை மற்றொரு உள்நாட்டு விசாரணையை நிறுவும் திறன் கொண்டதா என்பது இனி மையக் கேள்வி அல்ல. மாறாக, கடுமையான சர்வதேசக் குற்றங்களில் சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய நிறுவனங்களைக் கொண்ட ஒரு நாடு, சுதந்திரமான சர்வதேச ஆய்வின்றி அந்தக் குற்றச்சாட்டுகளை நம்பகத்தன்மையுடன் விசாரிக்க முடியுமா என்பதே கேள்வி.

உள்நாட்டு விசாரணைகள் சர்வதேச சட்டத்தரங்களைப் பூர்த்தி செய்ய வேண்டும். இலங்கை ஒரு தரப்பாக உள்ள, குடிசார் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கையின் (ICCPR) 6-வது பிரிவின் கீழ், ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்வதற்கான உள்ளார்ந்த உரிமை உண்டு. தன்னிச்சையாக உயிரைப் பறிப்பதற்கு எதிரான தடையானது, சட்ட விரோதமான மரணங்களை விசாரிக்க நாடுகளைக் கோரும் நேர்மறையான கடமைகளுடன் இணைந்துள்ளது. மேலும், உடன்படிக்கை உரிமைகளின் மீறல்களுக்கு ஒரு பயனுள்ள தீர்வு இருக்க வேண்டும் என்று பிரிவு 2(3) கோருகிறது.

இந்தக் கடமைகள் வெறும் நடைமுறை சார்ந்தவை அல்ல, சாராம்சமானவை. ஒரு ஆணைக்குழுவை நிறுவுவதன் மூலமோ, புலனாய்வாளர்களை நியமிப்பதன் மூலமோ அல்லது ஒரு உள்நாட்டு நீதிமன்றத்தில் அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதன் மூலமோ மட்டும் ஒரு நாடு இணக்கத்தை நிரூபிக்க முடியாது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் குழுவின் பொதுக் கருத்து எண் 36, சட்டவிரோத மரணங்கள் தொடர்பான விசாரணைகள் சுதந்திரமானதாகவும், பாரபட்சமற்றதாகவும், விரைவானதாகவும், முழுமையானதாகவும், பயனுள்ளதாகவும், நம்பகமானதாகவும், வெளிப்படையானதாகவும் இருக்க வேண்டும் என்று நிறுவுகிறது.

அதேபோல், சட்டவிரோத மரணங்கள் தொடர்பான விசாரணைக்கான மினசோட்டா நெறிமுறை (2016), தடயவியல் சான்றுகளைப் பாதுகாத்தல், தொடர்புடைய சூழ்நிலைகளை ஆராய்தல் மற்றும் மரணங்களில் சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய தனிநபர்கள் அல்லது நிறுவனங்களிடமிருந்து சுதந்திரமாக இருத்தல் உள்ளிட்ட சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட விசாரணைத் தரங்களை வகுக்கிறது.

செம்மணியில், இந்தக் கொள்கைகள், உடல் எச்சங்கள், அதனுடன் தொடர்புடைய அடக்கப் பொருட்கள், தொடர்புடைய வரலாற்றுப் பதிவுகள், சாட்சி வாக்குமூலங்கள் மற்றும் இராணுவக் காவலில் வைத்தல் மற்றும் கட்டாயமாகக் காணாமல் போதல் தொடர்பான குற்றச்சாட்டுகள் ஆகியவற்றை முழுமையாக ஆராய வேண்டும் என்று கோருகின்றன.

விசாரணையானது, தனிநபர்கள் எவ்வாறு அடக்கம் செய்யப்பட்டனர் என்பதை மட்டும் தீர்மானிக்காமல், அவர்களின் மரணங்கள் சட்டவிரோதச் செயல்களால் ஏற்பட்டதா என்பதையும், தனிப்பட்ட குற்றப் பொறுப்பை நிலைநாட்டக்கூடிய சான்றுகள் உள்ளனவா என்பதையும் தீர்மானிக்க வேண்டும்.

சில உடல் எச்சங்கள் வழக்கமான நடைமுறைகளைப் போன்ற முறையில் அடக்கம் செய்யப்பட்டன என்ற பரிந்துரை, அந்தத் தனிநபர்கள் இயற்கையாக இறந்தனர் என்பதை நிலைநாட்ட முடியாது. அடக்கம் செய்யப்பட்ட விதம், மரணத்திற்கான காரணம் மற்றும் சூழ்நிலைகளைத் தடயவியல் ரீதியாகத் தீர்மானிப்பதற்கு மாற்றாக அமையாது. அதேபோல், ஒரு தொற்றுநோய் அல்லது இயற்கை பேரழிவு கருதுகோளானது, அடையாளம் காணக்கூடிய வரலாற்று நிகழ்வுகள், நம்பகமான காலக்கணிப்பு, தடயவியல் கண்டுபிடிப்புகள் மற்றும் சரிபார்க்கக்கூடிய பிற அறிவியல் சான்றுகளால் ஆதரிக்கப்பட வேண்டும்.

அத்தகைய சான்றுகள் இல்லாமல், இந்த விளக்கங்கள் கருதுகோள்களாகவே இருக்கின்றன. சட்டவிரோதமாக இருக்கக்கூடிய மரணங்களை விசாரிக்கும் கடமையானது, ஊக முடிவுகளின் மூலம் நிறைவேற்றப்படுவதில்லை. அதற்கு உண்மையை நிலைநாட்டவும், பொருத்தமான இடங்களில், வழக்குத் தொடர வழிவகுக்கவும் திறனுள்ள ஒரு செயல்முறை தேவைப்படுகிறது.

இலங்கையின் உள்நாட்டுப் பொறுப்புக்கூறல் வழிமுறைகள் செயல்திறன் சோதனையில் தோல்வியடைந்துள்ளன

பல தசாப்தங்களாக, அடுத்தடுத்து வந்த இலங்கை அரசாங்கங்கள், ஈழத் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கடுமையான மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகளைக் கையாள்வதற்காக, உள்நாட்டு ஆணைக்குழுக்கள், விசாரணைகள் மற்றும் நல்லிணக்க வழிமுறைகளையே சார்ந்திருந்தன.

இவற்றில் கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க

தொடர்ச்சி: பக்கம் 13

ரஷ்யா–உக்ரைன் போர் (Russia–Ukraine War) தற்போது முன்னரங்க இராணுவ மோதல்கள் (Frontline Military Conflict), எரிசக்தி உட்கட்டமைப்புகள் மீதான தாக்குதல்கள் (Energy Infrastructure Attacks), அமெரிக்காவின் இராஜதந்திர அழுத்தம் (Diplomatic Pressure) மற்றும் ஐரோப்பிய ஆதரவு (European Support) ஆகியவை ஒன்றோடொன்று தொடர்புபடும் முக்கியமான புவிசார் அரசியல் (Geopolitics) கட்டத்தை எட்டியுள்ளது. குளிர்காலம் நெருங்கும் நிலையில், இராணுவ நடவடிக்கைகளுக்கும் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கைக்கும் இடையிலான தொடர்பு மேலும் தீவிரமடைந்துள்ளது.

ரஷ்யாவின் அண்மைய தாக்குதல்கள் உக்ரைனின் மின்சார உற்பத்தி நிலையங்கள், மின்பகிர்மானக் கட்டமைப்புகள் மற்றும் போக்குவரத்து வலையமைப்புகளைப் பாதித்துள்ளன. உக்ரைனின் கிழக்கு மற்றும் மத்திய பிராந்தியங்களைத் தாண்டி, மேற்குப் பகுதிகளிலுள்ள எரிசக்தி நிலையங்களையும் ரஷ்யா இலக்காக்கியுள்ளது. இதனால் பல பகுதிகளில் மின்வெட்டுகள் ஏற்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. உக்ரைன் அதிகாரிகளின் கூற்றுப்படி, மின்சார விநியோகத்தைப் பாதிப்பதன் மூலம் நாட்டின் பொருளாதாரச் செயற்பாடுகளையும் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையையும் அழுத்தத்திற்கு உள்ளாக்குவதே இந்தத் தாக்குதல்களின் முக்கிய விளைவாகும்.

முன்னரங்கில், கிழக்கு உக்ரைனில் ரஷ்யாவின் இராணுவ முன்னேற்ற முயற்சிகளும் உக்ரைனின் தற்காப்பு நடவடிக்கைகளும் தொடர்கின்றன. ஆளில்லா விமானங்கள் (Drones), ஏவுகணைகள் (Missiles) மற்றும் நீண்டதூரத் தாக்குதல் திறன்கள் (Long-range Strike Capabilities) ஆகியவை இரு தரப்பினரின் போர் உத்திகளில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. உக்ரைன், ரஷ்யாவின் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் எரிசக்தி தொடர்பான இலக்குகளுக்கு எதிராகத் தாக்குதல்களை மேற்கொண்டு வருகிறது. இத்தகைய பரஸ்பரத் தாக்குதல் உத்திகள் (Reciprocal Strike Strategies), எரிபொருள் விநியோகம், இராணுவத் தளவாடங்கள் (Military Logistics) மற்றும் போரைத் தொடர்ந்து நடத்துவதற்கான பொருளாதாரத் திறன் ஆகியவற்றைப் பாதிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன. இருப்பினும், தாக்குதல்களின் எண்ணிக்கை மட்டும் இராணுவ வெற்றியை நிரூபிப்பதில்லை; நிலப்பரப்புக் கட்டுப்பாடு, படையினரின் இழப்புகள் மற்றும் விநியோகத் திறன் ஆகியவையும் முக்கியமான மதிப்பீட்டு அளவுகோல்களாகும்.

வரவிருக்கும் குளிர்காலம் (Winter) உக்ரைனுக்கு கடுமையான சவால்களை ஏற்படுத்தக்கூடும். மின்சாரம், வெப்பமூட்டல், குடிநீர் மற்றும் போக்குவரத்துச் சேவைகள் பாதிக்கப்பட்டால், பொதுமக்கள் மனிதாபிமான நெருக்கடியை (Humanitarian Crisis) எதிர்கொள்ள நேரிடும். இதனால் வான்பாதுகாப்பை (Air Defence) வலுப் படுத்துதல், அவசர மின்சார வசதிகளை ஏற்படுத்து தல் மற்றும் சேதமடைந்த உட்கட்டமைப்புகளை மீளமைத்தல் ஆகியவை உக்ரைன் அரசாங்கத்தின் முக்கிய முன்னுரிமைகளாக இருக்கும். ஐரோப்பிய ஒன்றியம் (European Union) உக்ரைனின் எரிசக்தி மீள்திறனை (Energy Resilience) மேம்படுத்துவதற்கும் மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கும் தொடர்ந்து ஆதரவு அளித்து வருகிறது.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் (Peace Negotiations) மீண்டும் முன்னெடுக்கப்படுவதற்கான முயற்சிகளும் தொடர்கின்றன. அமெரிக்கா தலைமையிலான இராஜதந்திர முயற்சிகள் ரஷ்யா, உக்ரைன் மற்றும் அமெரிக்கப் பிரதிநிதிகள் பங்கேற்கக்கூடிய பேச்சுவார்த்தைகளுக்கான வாய்ப்புகளை உருவாக்கியுள்ளன. இருப்பினும், பிராந்திய இறையாண்மை (Territorial Sovereignty), ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளின் எதிர்காலம் மற்றும் உக்ரைனுக்கான பாதுகாப்பு உத்தரவாதங்கள் (Security Guarantees) தொடர்பாக அடிப்படை வேறுபாடுகள் நீடிக்கின்றன. எந்தவொரு சமாதான உடன்பாடும் நீடித்ததாக அமைய வேண்டுமெனில், போர்நிறுத்தம் (Ceasefire) மட்டுமன்றி, எதிர்காலப் பாதுகாப்பு மற்றும் சர்வதேசச் சட்டம் தொடர்பான பிரச்சினைகளும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் அணுகுமுறை,உக்ரைனின்இராணுவஉத்திகளுக்கும்வாஷிங்டனின் சமாதான முயற்சிகளுக்கும் இடையிலான உறவில் அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. ரஷ்யாவின் எரிசக்தி இலக்குகள் மீதான உக்ரைனின் தாக்குதல்களைக் குறைக்க அமெரிக்கா அழுத்தம் கொடுத்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அதேவேளை, ரஷ்யாவிலிருந்து டீசல் விநியோகம் மற்றும் எரிசக்தி உட்கட்டமைப்புகள் மீதான தாக்குதல்களை நிறுத்துவதற்கான முன்மொழிவுகள் தொடர்பாகவும் விவாதங்கள் இடம்பெற்றுள்ளன. ஆனால்,

A.M.L லம்பேட்

அறிவிக்கப்பட்ட எரிசக்திப் போர்நிறுத்தம் (Energy Ceasefire) நடைமுறையில் இருதரப்பினராலும் முழுமையாகக் கடைப்பிடிக்கப்படவில்லை என உக்ரைன் தரப்பு தெரிவித்துள்ளது. இதனால் அமெரிக்காவின் இராஜதந்திர அணுகுமுறை, ரஷ்யாவுடனான உறவுகள் மற்றும் உக்ரைனுக்கான ஆதரவு ஆகியவற்றுக்கு இடையில் சிக்கலான சமநிலையை உருவாக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஐரோப்பிய நாடுகள் உக்ரைனுக்கான இராணுவ, நிதி மற்றும் மனிதாபிமான ஆதரவைத் தொடர்ந்து வழங்கி வருகின்றன. ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அதன் உறுப்பு நாடுகள், வான்பாதுகாப்பு, எரிசக்தி உட்கட்டமைப்பு மீளமைப்பு மற்றும் இராணுவப் பயிற்சி போன்ற துறைகளில் உதவி அளிக்கின்றன. அதேவேளை, எதிர்கால சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஐரோப்பாவின் பங்கேற்பு குறித்தும் விவாதங்கள் இடம்பெறுகின்றன. உக்ரைனின் பாதுகாப்பு ஐரோப்பாவின் பரந்த பிராந்தியப் பாதுகாப்புடன் தொடர்புடையது என்பதால், எந்தவொரு தீர்விலும் ஐரோப்பிய நாடுகளின் பங்கு முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

மொத்தத்தில், இந்தப் போர் இராணுவ மோதலைத் தாண்டி, எரிசக்திப் பாதுகாப்பு (Energy Security), பொருளாதார அழுத்தம் (Economic Pressure), கூட்டணி அரசியல் (Alliance Politics) மற்றும் சர்வதேச இராஜதந்திரம் (International Diplomacy) ஆகியவற்றை உள்ளடக்கிய பல்முனை மோதலாக உருவெடுத்துள்ளது. குளிர்காலத்தின் தாக்கம், அமெரிக்காவின் இராஜதந்திர அணுகுமுறை, ஐரோப்பாவின் தொடர்ச்சியான ஆதரவு மற்றும் இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆகியவை அடுத்த கட்டத்தைத் தீர்மானிக்கும் முக்கிய காரணிகளாக இருக்கும். எனினும், நிலையான சமாதானம் உருவாக வேண்டுமெனில், போர்நிறுத்தத்தைத் தாண்டி இறையாண்மை, பாதுகாப்பு மற்றும் சர்வதேசச் சட்டம் தொடர்பான பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட வேண்டும்.

• • •

தமிழில்: **ஆர்த்தீகன்**

சவூதி இராணுவச் செலவு ஆண்டுக்கு 82 பில்லியன் டாலருக்கும் அதிகமாக உள்ளது, ஆனாலும் ஹூதி தாக்குதல்களிலிருந்து தனது உட்கட்டமைப்பைப் பாதுகாக்க அந்த இராச்சியம் இன்னும் போராடி வருகிறது. இது, அது வாங்கியுள்ள ஆயுதங்களின் விலைக்கும், இந்தக் குறிப்பிட்ட போரில் அவற்றின் செயற்றிறனுக்கும் இடையிலான இடைவெளியை வெளிப்படுத்துகிறது. மேம்பட்ட போர் விமானங்கள் மற்றும் ஏவுகணைப் பாதுகாப்பு அமைப்புகள் ரியாத்திற்கு ஒரு கணிசமான சாதகத்தை அளிக்கின்றன, ஆனால் சிறிய ட்ரோன்கள் மற்றும் தாழ்வாகப் பறக்கும் குரூஸ் ஏவுகணைகளைக் கண்டறிய விரிவான ரேடார் கண்காணிப்பும், பிரிவுகளுக்கு இடையே விரைவான தகவல் பகிர்வும் தேவைப்படுகிறது. அந்தத் திறன்கள் இல்லாமல், விலையுயர்ந்த உபகரணங்களால் இலக்குகளை நம்பகத்தன்மையுடன் சரியான நேரத்தில் கண்டறிந்து தாக்க முடியாது.

ஒரு நீடித்த மோதலில், ஆயுதங்களின் விலையில் உள்ள வேறுபாடும் குறிப்பிடத்தக்கதாகிறது. மேற்கோள் காட்டப்பட்ட மதிப்பீடுகளின்படி, ஒரு பேட்ரியாட் இடைமறிப்பு ஏவுகணையின் விலை 3 மில்லியன் டாலருக்கும் அதிகமாகும், அதேசமயம் சில ஹூதி ட்ரோன்களின் விலை வெறும் 15,000–25,000 டாலர்கள் மட்டுமே. மிகவும் மதிப்புமிக்க சொத்துக்களைப் பாதுகாக்க, பாதுகாவலர்கள் மலிவான விமானங்களுக்கு எதிராக இதுபோன்ற இடைமறிப்பு ஏவுகணைகளைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. ஆனால், தொடர்ச்சியான தற்காப்பு நடவடிக்கைகள், குறிப்பாக வான் பாதுகாப்பு அமைப்புகளுக்கான வலுவான உலகளாவிய தேவைக்கு மத்தியில், விரைவாக நிரப்ப முடியாத ஆயுதக் கையிருப்புகளைக் குறைத்துவிடுகின்றன. அவர்கள் ஏவும் பெரும்பாலான விமானங்கள் தங்கள் இலக்குகளை அடையத் தவறினாலும், இது ஹூதிகளுக்கு அந்த இராச்சியத்தின் பாதுகாப்புகளைச் சீர்குலைக்க ஒரு வாய்ப்பை அளிக்கிறது.

சவூதி ஆயுதப் படைகளின் கட்டமைப்பால் தொழில் நுட்பச் சிக்கல்கள் மேலும் தீவிரமடைகின்றன. வழக்கமான இராணுவத்தையும் தேசியக் காவல் படையையும் பிரித்திருப்பது, வரலாற்று ரீதியாக, ஒரு ஆட்சிக்கவிழ்ப்பிலிருந்து முடியாட்சியைப் பாதுகாக்க ஓரளவிற்குப் பயன்பட்டுள்ளது. ஆனால், தனித்தனி கட்டளைத் தொடர்களும், மிகவும் மையப்படுத்தப்பட்ட முடிவெடுக்கும் முறையும் ஒருங்கிணைப்பைத் தடுக்கலாம் மற்றும் தளபதிகளின் முன்முயற்சியைக் கட்டுப்படுத்தலாம். எனவே, மற்றொரு ஆயுதக் கொள்முதல் மட்டும் இந்தப் பிரச்சினையைத் தீர்க்காது. தகவல் தாமதமாக வந்து சேர்ந்தால் மற்றும் பதிலடியை ஒருங்கிணைக்க அதிக நேரம் எடுத்தால், கூடுதல் கண்டறிதல் மற்றும் இடைமறிப்பு அமைப்புகள் கூட வரையறுக்கப்பட்ட முடிவுகளையே வழங்கும்.

இந்தக் குறைபாடுகளைச் சரிசெய்ய நேரம் எடுக்கும் என்று ஹூதிகள் நியாயமாக எதிர்பார்க்கலாம், அதுவரை அவர்கள் தொடர்ந்து கடுமையான தாக்குதல்களை நடத்த முடியும். உள்நாட்டு உற்பத்தியும் பரந்த விநியோக வலைப்பின்னல்களும் அந்தப் பிரச்சாரத்தைத் தக்கவைக்க உதவுகின்றன. இந்த இயக்கம் பெரிய தொழிற்சாலைகளை அழிக்கவோ அல்லது விமானப் பயணத்தை முற்றிலுமாக நிறுத்தவோ தேவையில்லை; தொடர்ச்சியான அச்சுறுத்தலே விமான நிறுவனங்கள் தங்கள் வழித்தடங்களை மறுபரி சீலனை செய்யவும், முதலீட்டாளர்கள் முடிவுகளை ஒத்தி வைக்கவும், சவூதி தலைவர்கள் உட்கட்டமைப்பைப் பாது காக்க அதிக செலவு செய்யவும் போதுமானது.

வெளிநாட்டிலிருந்து உதவி வருமா?

சவூதி அரேபியாவைப் பாதுகாக்கத் தயாராக இருப்பதாக துருக்கி மற்றும் பாகிஸ்தான் வெளியிட்ட அறிக்கைகள், இவ்விரு நாடுகளும் போரில் முழுமையாக ஈடுபடும் என்றோ, அல்லது ஏமனுக்குள் ஹூதிகளுடன் போரிடும் என்றோ எதிர்பார்ப்பதற்கு இன்னும் எந்த அடிப்படையையும் அளிக்கவில்லை. அக்டோபர் 5 ஆம் தேதி நடந்த ஒரு கூட்டத்தில், மெக்கா ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நாடுகள், சவூதி அரேபியாவின் பாதுகாப்பிற்காகப் படைகளையும் உபகரணங்களையும் வழங்குவதாக அறிவித்தன. இருப்பினும், அந்த வாக்குறுதிகளின் அரசியல் முக்கியத்துவம், கூட்டணி நாடுகள் தாக்குதல்களின் எண்ணிக்கையையும் அவை ஏற்படுத்தும் சேதங்களையும் உண்மையில் குறைக்க முடியுமா என்பதைப் பொறுத்தே அமையும். தாக்குதல்கள் தொடரும் வரை, ஹூதி தலைவர்கள் இத்தகைய அறிவிப்புகளை, போரின் அபாயகரமான விரிவாக்கத்தைத் தொடர்ந்து வர வாய்ப்பில்லாத வெறும் சொல்லாடல்களாகவே கருதக்கூடும்.

அங்காராவின் நிலைப்பாடு இந்தக் கணக்கீட்டை வலுப்படுத்துகிறது. துருக்கிய வெளியுறவு அமைச்சர் ஹக்கான் ஃபிடான், வான் பாதுகாப்பு, மின்னணுப் போர் மற்றும் தொழில்நுட்ப ஆதரவு ஆகியவற்றில் சாத்தியமான உதவிகளை கோடிட்டுக் காட்டினார், அதே நேரத்தில் வெளிநாட்டு மண்ணில் தாக்குதல் நடவடிக்கைகளில் துருக்கியப் படைகள் பங்கேற்பதை வெளிப்படையாக நிராகரித்தார். இவ்வாறு, துருக்கி ஆரம்பத்திலிருந்தே தனது பங்கிற்குத் தெளிவான வரம்புகளை நிர்ணயித்துள்ளது.

நேரடித் தலையீட்டைத் தவிர்க்க பாகிஸ்தானுக்கும் காரணங்கள் உள்ளன. ஏமன் போரில் இணைவது என்பது கூடுதல் இராணுவச் செலவினங்களையும், அண்டை நாடான ஈரானுடனான உறவுகள் மோசமடையும் அபாயத்தையும் குறிக்கும். எனவே, ரியாத்தின் சார்பாக ஹூதிகளைத் தோற்கடிக்கும் பணியை இஸ்லாமாபாத் மேற்கொள்ளும் என்று எதிர்பார்ப்பது அவசரமான முடிவாக இருக்கும். இராச்சியத்திற்கு அது அளித்துள்ள கடமைகள், குறிப்பிட்ட வசதிகளைப் பாதுகாப்பதற்கும் இராணுவ உதவியை வழங்குவதற்கும் மட்டுமேயான ஒரு வரையறுக்கப்பட்ட பங்கிற்கு இடமளிக்கின்றன. அமெரிக்காவின் நிலைப்பாட்டிற்கும் இதே போன்ற ஒரு வேறுபாடு பொருந்தும். உளவுத் தகவல்களைப் பகிர்வதும், இலக்குகளைத் தாக்க உதவுவதும் சவூதி நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கின்றன, ஆனால் எந்த விலை கொடுத்தாவது தாக்குதல்களை நிறுத்த வாஷிங்டன் தயாராக இருக்கிறது என்று அவை அர்த்தப்படுத்தவில்லை. வெளித் தலையீட்டிற்கான இந்த வரம்புகளையே ஹூதிகள் நம்பியிருப்பதாகத் தெரிகிறது. சவூதியின் கூட்டாளிகள் தங்களைத் தற்காத்துக் கொள்ள உதவுவார்கள், ஆனால் யேமனில் சவூதியின் நோக்கங்களை அடைவதற்காக ஒரு நீண்ட போரில் சிக்கிக்கொள்ளத் தயங்குவார்கள் என்பதே அவர்களின் கணிப்பு.

அந்த ஆதரவு தாக்குதல்களில் கணிசமான குறைப்பை ஏற்படுத்தும் வரை, கூட்டாளிகளைக் கொண்டு வருவதற்கான அச்சுறுத்தல்கள் அன்சார் அல்லாவிடம் பெரிய அளவில் எடுபடாது.

தொடர்ச்சியான சவூதி தலையீடு, ஒரு பெரிய பாதுகாப்பு நிதி ஒதுக்கீடோ அல்லது வெளிநாட்டுக் கூட் டாளிகளோ தடுக்க முடியாத இழப்புகளை ஏற்படுத்தும் என்பதை ஹூதிகள் நிரூபிக்க முயல்கின்றனர். அந்த அழுத்தம், ரியாத்தை அதன் எதிரிகளுக்கான உதவியைக் குறைக்கவோ அல்லது தங்களுக்குச் சாதகமான தீர்வு நிபந்தனைகளை ஏற்கவோ தூண்டினால், அந்த இயக்கம் தனது போர்க்கள வெற்றிகளை நீடித்த அரசியல் நன்மைகளாக மாற்றிக்கொள்ள ஒரு வாய்ப்பைப் பெறும். அத்தகைய ஒரு விளைவு, சவூதி அரேபியாவின் நிலையை பலவீனப்படுத்துவதன் மூலம் ஈரானுக்கும் பயனளிக்கும். இருப்பினும், அதன் உடனடி விளைவு, யேமனில் அதிகாரத்திற்கான போராட்டத்தில் அன்சார் அல்லாவையே வலுப்படுத்துவதாக இருக்கும்.

நன்றி ரஸ்யா ருடே

பிரிட்டன் நாளொன்றுக்கு... தொடர்ச்சி...

அதிகம்.

அமெரிக்கா-ஈரான் இடையிலான போர் பணவீக்கம் குறித்த அச்சத்தை அதிகரித்துள்ளது. G7 நாடுகளில் பிரிட்டனில்தான் கடன் வாங்குவதற்கான செலவு (வட்டி விகிதம்) மிக அதிகமாக உள்ளது. மேலும், 10 ஆண்டு கால அரசுப் பத்திரங்களின் (gilts) மீதான வருவாய் விகிதம், கடந்த 19 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு உச்சத்தை நெருங்கியுள்ளது.

இதற்கு நிதி அமைச்சரின் தீர்வு என்ன? வங்கிகள், பந்தய நிறுவனங்கள், சேமிப்பாளர்கள் மற்றும் நில உரிமையாளர்கள் மீதான வரிகளை உயர்த்துவது; அதே வேளையில், வருமான வரி வரம்புகளை 2031-ஆம் ஆண்டு வரை மாற்றாமல் அப்படியே வைத்திருப்பது.

பிரிட்டனில் வரிகள் தொடர்ந்து உயர்ந்து வருகின்றன, கடன் சுமை தொடர்ந்து வளர்ந்து வருகிறது; ஆனால், அரசுப் பத்திரங்களை வைத்திருப்பவர்களுக்குத் தங்கள் பணம் கிடைக்குமா என்ற கவலையே இல்லை.

ஐரோப்பாவை விட்டு ... தொடர்ச்சி...

தனது செல்வ மேலாண்மை மற்றும் தொழில்நுட்பத் துறைகளை விரிவுபடுத்துவதற்கான ஐந்தாண்டுத் திட்டத்தைத் தொடர்வதால் இது முக்கியத்துவம் பெறுகிறது.

ஐரோப்பிய அமைதியின்மை, மத்திய கிழக்கு போர் மற்றும் அடுத்த வார அமெரிக்க இடைத்தேர்தல்கள் ஆகியவை நிச்சயமற்ற தன்மையை உருவாக்கும் நிலையில், உலகளாவிய முதலீட்டாளர்கள் தங்கள் இடர் அபாயங்களை வெவ்வேறு சந்தைகளில் பரவலாக்க முற்படுவதால், ஹாங்காங்கும் சீனாவும் பயனடையக் கூடும்.

தேர்தலில் தோல்வி ... தொடர்ச்சி...

அவரது குடும்பத்தினருக்கு விசாக்களை வழங்கியது. அவர் மீது ஊழல் மற்றும் பணமோசடி தொடர்பான விசாரணைகள் நடைபெற்று வருகின்றன; இதை அவர் மறுக்கிறார். அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகளுக்கு அஞ்சியே தான் நாட்டை விட்டு வெளியேறியதாக அவர் கூறுகிறார். வெளிநாட்டிலிருந்தபடியே எதிர்க்கட்சியை வழிநடத்தப்போவதாகவும் அவர் உறுதியளித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில், அர்ஜென்டினா அதிபர் ஜேவியர் மிலேயின் "தைரியம், நீதியுணர்வு மற்றும் சட்டத்தின் ஆட்சிக்கான மரியாதை" ஆகியவற்றிற்காக அவருக்கு நன்றி தெரிவித்துள்ளார். மேலும், அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் மற்றும் தன்னை வரவேற்ற "சிறந்த அமெரிக்க மக்களுக்கும்" அவர் நன்றி தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின்... தொடர்ச்சி...

எதிர்ப்புச் சட்டமானது, கருத்துச் சுதந்திரம், அமைதியான முறையில் ஒன்றுகூடுதல், சங்கம் அமைத்தல், மதம் அல்லது நம்பிக்கை மற்றும் பொது விவகாரங்களில் பங்கேற்பதற்கான சுதந்திரம் ஆகிய வற்றுக்குத் திறம்பட்ட பாதுகாப்புகளைக் கொண்டிருக்க வேண்டும்.

முன்மொழியப்பட்ட கட்டமைப்பில் அதிகாரிகளின் ஊடான தடுப்புக் காவலே மையமாக இருப்பது குறித்து அந்த அலுவலகம் கவலை கொண்டுள்ளது. எனவே, ஒவ்வொரு ஆரம்ப மற்றும் நீட்டிக்கப்பட்ட காவல் உத்தரவுக்கும் சுதந்திரமான நீதித்துறை ஒப்புதல் தேவைப்பட வேண்டும்

மேலும் தடுப்பு காவலை மறுக்கவும் விடுவிக்கவும் நீதிமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட வேண்டும். நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தலுக்கான காலக்கெடு, கைது செய்யப்பட்ட நேரத்திலிருந்து தொடங்க வேண்டும் என்று அந்த அறிக்கை கூறுகிறது.

முன்மொழியப்பட்ட பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமூலத்தின் கீழ், தன்னிச்சையான கைதுகள், அத்துமீறிய சோதனைகள் மற்றும் அதிகார துஷ்பிரயோகங்களுக்கு எதிராகக் கடுமையான பாதுகாப்புகளை அந்த அலுவலகம் கோரியுள்ளது.

நீதித்துறை பிடியாணைகளே வழக்கமாக இருக்க வேண்டும் என்றும், எந்தவொரு விதிவிலக்குகளும் உடனடி நீதிமன்ற மறுஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்றும் அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது. சித்திரவதை, கொடுமைப்படுத்துதல், வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் மற்றும் வற்புறுத்தி விசாரணை செய்தல் ஆகியவற்றுக்கு எதிரான வலுவான பாதுகாப்புகளின் அவசியத்தையும் ஐ.நா வலியுறுத்தியுள்ளது.

முன்மொழியப்பட்ட சட்டமூலத்தின் கீழ், தடுப்புக் காவல்,வழிகாட்டுதல்கள்,தடைஉத்தரவுகள்,கட்டுப்பாடுகள் மற்றும் தடைசெய்யப்பட்ட இடங்களைக் குறிப்பிடுதல் உள்ளிட்ட பரந்த தன்னிச்சையான அதிகாரங்கள் நிர்வாக அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளமை கவலை அளிப்பதாக ஐ.நா அறிவித்துள்ளது.

குறிப்பாக, அரசாங்கம் பயங்கரவாதம் மற்றும் அது தொடர்பான குற்றங்களின் வரையறையை தெளிவுபடுத்த வேண்டும் என்றும் ஒவ்வொரு கைது மற்றும் தடுப்புக்காவலுக்கும் உடனடி, சுதந்திரமான மற்றும் பயனுள்ள நீதித்துறை மேற்பார்வையைக் கட்டாயமாக்க வேண்டும் என்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் சித்திரவதை, கொடுமைப்படுத்துதல், தன்னிச்சையான தடுப்புக்காவல் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் ஆகியவற்றுக்கு எதிரான பாதுகாப்புகளை வலுப்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது

மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்கு முன்னர் அர்த்தமுள்ள பொது ஆலோசனையை நடத்த வேண்டும் என்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் வலியுறுத்தியுள்ளது.

செம்மணி மனிதப் ... தொடர்ச்சி...

மரணதண்டனைக் கைதியான லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ தனது வாக்குமூலத்தில், 1996ஆம் ஆண்டில் செம்மணி சோதனைச்சாவடியில் நூற்றுக் கணக்கானோர் கைது செய்யப்பட்டதாகவும், கொல்லப்பட்டவர்களின் உடல்கள் செம்மணிப் பகுதி மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடங்களில் புதைக்கப்பட்டதாகவும் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

1999 ஆம் ஆண்டில் செம்மணியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின் போது 15 உடல்கள் மீட்கப்பட்டு உண்மைகள் வெளிவந்த வரலாறும் நம் கண்முன்னே உள்ளது. இவ்வாறான நேரடியான குற்றவியல் ஒப்புதல்களும், சாட்சிகளின் வாக்குமூலங்களும் இருக்கும் போது, பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினர், பாதுகாப்புப் படையினரையும் அரச இயந்திரத்தையும் காப்பாற்றும் நோக்கத்துடன் இத்தகைய பக்கச்சார்பான இடைக்கால அறிக்கையைச் சமர்ப்பித்திருப்பது கண்டிக்கத்தக்கது.

பாதிக்கப்பட்ட தரப்பினரான வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்கள் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள நகர்த்தல் பத்திரத்தில் கோரியுள்ளவாறு, பேராசிரியர் ராஜ் சோமதேவவின் இந்த இடைக்கால அறிக்கை எந்தவிதத்திலும் விஞ்ஞானபூர்வ மற்றும் வரலாற்று உண்மைகளை முழுமையாகப் பிரதிபலிக்கவில்லை. இது முழுக்க முழுக்கத் திசை திருப்பப்பட்ட, அரசாங்கத்தின் அழுத்தங்களுக்குப் பணிந்து தயாரிக்கப்பட்ட ஏமாற்று ஆவணமாகும்.

எனவே, இந்த இடைக்கால அறிக்கை முற்றாக நிராகரிக்கப்பட வேண்டும் என்பதுடன், இவ்வறிக்கையின் சர்ச்சைக்குரிய முடிவுகளை வைத்து இறுதித் தீர்ப்புக்கு வருவதைத் நீதிமன்றம் தவிர்க்க வேண்டும்.

செம்மணி மண்ணில் புதைக்கப்பட்டிருப்பது வெறும் எலும்புக்கூடுகள் அல்ல.அது தமிழினத்தின் அழிக்க முடியாத வரலாறு. அந்த வரலாற்றை மூடிமறைத்து, உண்மையை மழுங்கடிக்க முயலும் எந்தவொரு அதிகார வர்க்கத்தின் சதித்திட்டத்தையும் தமிழ் மக்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்கள்.

சுதந்திரமான சர்வதேசத் தடம்சார் நிபுணர்களின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் மட்டுமே இத்தகைய அகழ்வாராய்ச்சிகள் மற்றும் ஆய்வுகள் முழுமைபெற வேண்டும்; அப்போதுதான் உண்மையான நீதி வெளிச்சத்திற்கு வரும். தற்போதைய நிலையில் தாமதமின்றி அதற்கான களமமைப்பதே தமிழர்களின் எதிர்கால இருப்புக்கான முதற்படி.

• • •

செம்மணி கூட்டுப் ... தொடர்ச்சி...

ஆணைக்குழு, காணாமல் போனோர் மீதான ஆணைக்குழு மற்றும் எண்ணற்ற பிற விசாரணை முயற்சிகள் அடங்கும். ஆயினும், அரச பாதுகாப்புப் படைகள் சம்பந்தப்பட்ட நீண்டகாலக் குற்றச்சாட்டுகளுக்கு விரிவான குற்றவியல் பொறுப்புக்கூறல் தொடர்ந்து இல்லாதது, இந்த அணுகுமுறையின் வரம்புகளை வெளிப்படுத்துகிறது.

சர்வதேச சட்டத்தில், ஒரு விசாரணை வழிமுறையின் செயற்றிறன் அதன் சுதந்திரம், அதிகாரங்கள், வழிமுறை மற்றும் முடிவுகளால் தீர்மானிக்கப்படுகிறது, வெறுமனே அதன் முறையான இருப்பால் அல்ல.

குற்றச்சாட்டுகள் இராணுவம் அல்லது பாதுகாப்பு அமைப்பின் உறுப்பினர்கள் சம்பந்தப்பட்டதாக இருக்கும் போது, நிறுவன சுதந்திரத்தின் தேவை குறிப்பாக முக்கியத்துவம் பெறுகிறது.

ஒரு விசாரணை உள்நாட்டு நீதித்துறை மேற்பார்வையின் கீழ் செயற்படுவதால் மட்டுமே, அது உண்மையாகவே சுதந்திரமானது எனக் கருத முடியாது. புலனாய்வாளர்கள், இராணுவப் பதிவேடுகளை அணுகவும், அரச அதிகாரிகளின் நடத்தையை ஆராயவும், சான்றுகளைப் பாதுகாக்கவும், அரசியல் தலையீடு இன்றிப் பொறுப்பைத் தொடரவும் தேவையான அதிகாரத்தையும் நடைமுறைத் திறனையும் பெற்றிருக்க வேண்டும்.

தொடரும்

ஆனந்தபுரத்தில் விட்டுச் ... தொடர்ச்சி...

குறித்து சாட்சியமளிப்பதற்கு யாரும் தப்பவில்லை என்றே நாம் பல வருடங்களாக நம்பிக்கொண்டிருந்தோம். இருப்பினும் அங்கிருந்து தப்பிப்பிழைத்தவர்கள் சிலர் இப்போது அவர்களது மௌனத்தைக் கலைத்துள்ளனர். இராணுவ வெற்றி என்பது காயமடைந்தவர்களைக் கொல்வதற்கான உரிமையை வழங்கிவிடாது. கடந்த 17 வருடங்களாகத் தொடரும் தண்டனைகள் ஏதுமற்ற நிலைமை, குற்றவியல் பொறுப்பை அழித்துவிடாது. இவ்வாறானதொரு பின்னணியில் கடந்த காலங்களில் நிகழ்ந்தவற்றை இலங்கை வெளிப்படுத்துவதுடன், மீறல்களுடன் தொடர்புடையவர்களை நீதியின் முன் நிறுத்தவேண்டும்' என வலியுறுத்தியுள்ளார்.

• • •

புளூட்டோவிற்கு... தொடர்ச்சி...

1,500 கிலோமீட்டர் விட்டம் கொண்டிருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் மதிப்பிடுகின்றனர். இது இதுவரை கண்டறியப்பட்ட குள்ளக்கோள் வேட்பாளர்களிலேயே மிகப்பெரியவற்றில் ஒன்றாக இருக்கலாம். இது தற்போது சூரியனிலிருந்து பூமியை விட சுமார் 46 மடங்கு அதிக தொலைவில் உள்ளது. ஒப்பீட்டளவில், புளூட்டோ சூரியனிலிருந்து சராசரியாக 40 மடங்கு அதிக தொலைவில் அமைந்துள்ளது.

பால்வெளி மண்டலத்தின் (Milky Way) தளத்திற்கு அருகில், கோடிக்கணக்கான நட்சத்திரங்கள் நிறைந்த பின்னணியில் இருந்ததால், இந்த விண்பொருள் இதுவரை கண்டறியப்படாமல் இருந்திருக்கலாம். இருப்பினும், ரூபின் ஆய்வகத்தின் தொடர்ச்சியான படங்கள் மற்றும் கண்காணிப்பு மென்பொருளைப் பயன்படுத்தி, விஞ்ஞானிகளால் இதன் நகர்வைக் கண்டறிய முடிந்தது. இது உறுதிப்படுத்தப்பட்டால், சர்வதேச வானியல் ஒன்றியத்தால் (International Astronomical Union) அங்கீகரிக்கப்பட்ட ஐந்து குள்ளக்கோள்களுடன் (எரிஸ், ஹௌமியா, மேக்மேக், செரெஸ் மற்றும் புளூட்டோ) இதுவும் இணையும். இதில் புளூட்டோ, 2006-ஆம் ஆண்டில் மறுவகைப்படுத்தப்படும் வரை சூரிய குடும்பத்தின் ஒன்பதாவது கோளாகக் கருதப்பட்டது. குள்ளக்கோள்கள் சூரியனைச் சுற்றி வருகின்றன; அவை தங்களின் ஈர்ப்பு விசையினால் ஏறக்குறைய கோள வடிவம் கொண்டவையாக மாறுகின்றன. ஆனால், இவை தங்களின் சுற்றுப்பாதையில் பிற விண்பொருட்களையும் கொண்டிருக்கின்றன.

சர்வதேச வானியல் ஒன்றியத்தால் அதிகாரபூர்வமாகமாக அங்கீகரிக்கப்பட்ட கடைசி குறுங்கோள் 'ஹௌமியா' (Haumea) ஆகும்; இது 2008-ல் அங்கீகரிக்கப்பட்டது.

இனப்படுகொலைக்குச் சர்வதேச... தொடர்ச்சி...

முள்ளிவாய்க்காலின் நினைவுகளும் செம்மணியின் புதைகுழிகளும் ஈழத் தமிழ் மக்களின் நீதிக்கான குரலும் ஐ.நா. தனது இலக்கை, தனது பணியைத் தவறவிட்ட பக்கங்களை வரலாறு முழுவதும் நினைவூட்டும். எனவே ஐ.நா. தனது தோல்விகளை ஒப்புக்கொள்வதுடன் நிற்காமல், அவற்றைச் சரிசெய்யும் நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டும். முதலில் ஈழத் தமிழ் மக்களின் சர்வதேச விசாரணைக்கான கோரிக்கைக்குச் செவிசாய்ப்பதுதான் உலக அமைதிக்கான அதன் வாக்குறுதியை அர்த்தமுள்ளதாக மாற்றும் என்பதே அதியுண்மையாகும்.

இலங்கை நீதியில் நம்பிக்கை... தொடர்ச்சி...

தமிழ்த் தேசியக் கட்சிகள், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சர்வதேச இராஜதந்திரிகளுக்கு இதனைத் தெளிவுபடுத்த வேண்டிய அவசியம் உண்டு. இதனைவிட்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக் கோரி எதிர்க்கட்சித் தலைவருடன் தூதரகங்களுக்கு அலையும் தமிழ்த் தேசியக் கட்சிகள் பேராசிரியர் ராஜ் சோமதேவாவின் பொய் அறிக்கை தொடர்பாகவும் தூதரகங்களுக்கு உண்மையைத் தெளிவுபடுத்தி, இனியும் இலங்கை அரசின் நடவடிக்கையில் நம்பிக்கை இல்லை, சர்வதேச நீதியே தேவை என்பதை மீண்டும் இவருடைய அறிக்கை உறுதிப்படுத்தியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கிழக்கு மாகாணத்தில் தொல்லியல் தொடர்பான குழுவை அமைத்தபோது, பேராசிரியர் ராஜ் சோமதேவாவையும் அந்தக் குழுவில் நியமித்திருந்தார். அவரது கடந்தகாலச் செயற்பாடுகளையும் தற்போதைய செம்மணி அறிக்கையையும் கருத்திற்கொள்ளும்போது, அவர் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி நிரலுடன் செயற்படுவதாகவே தெரிகிறது. இதன் உண்மைத்தன்மையை அறிய சர்வதேச நிபுணர்களை அழைப்பதே ஒரே வழி.

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .

சிறுவர் ஆக்கங்கள்

செ. தச்சாயினி
பாலையூற்று

மழை

கரு மேகங்கள் கூடி நின்றன,
காற்று சற்றே குளிர்ந்தது,
மண்ணின் வாசம் மெல்ல எழுந்தது,
மழை வரப் போகிறதென பறவைகள் சொன்னது...

முதல் துளி மண்ணில் விழுந்த போது,
சிறு புழுதி எழுந்து அடங்கியது,
சாரலாக தொடங்கியது,
சடசடவென வலுத்தது...

ஓடுகளில் தாளம் போடும்,
மர இலைகளில் முத்தாக ஆடும்,
தெருவெங்கும் வெள்ளமாக ஓடும்,
குழந்தைகளை காகித கப்பல் விட சொல்லும்...

சிறிது நேரத்தில் வானம் தெளியும்,
ஈர மண்ணில் வெயில் விழும்,
வானவில் ஒன்று தோன்றும்,
மழை விட்டும் மனம் அதையே நினைக்கும்...

உ.ஷமீரா
பாலையூற்று

வானவில்

மழைக்கு பின் வானம் சிரித்தது,
ஏழு நிறத்தில் கதை விரித்தது!

யாரும் தொட முடியாத தூரத்தில்,
கண்கள் மட்டும் தொட்ட தேவதை நீ!

நிலையாக இல்லை என்று தெரியும்,
இருந்தும் மனம் உன்னை தேடும்!

நீ வருவது சில நொடிகள் தான்,
நீ தரும் மகிழ்ச்சி பல நாட்கள் தான்!

சிவப்பு உன் கோபம் போல,
ஆரஞ்சு உன் சிரிப்பு போல,
மஞ்சள் உன் நம்பிக்கை போல,
பச்சை உன் இளமை போல,
நீலம் உன் ஆழம் போல,
கருநீலம் உன் மௌனம் போல,
ஊதா உன் கனவு போல,

ஏழு நிறமும் சேர்ந்து தான் நீ,
ஏழு நிறத்திலும் அழகு தான் நீ!

சு.சாந்தினி
பீலியடி

நம்ம தாயகத்தில எப்படி காடழிக்கிறாங்க என்று தெரியும்?

சிறுசிறு கைத்தொழில்களுக்காக காட்டைப் பயன்படுத்துறாங்க. பிறகு அந்த காட்டுக்கு பக்கத்துல இருக்கிற வீதியில வச்சே அந்த பொருட்கள விக்கிறாங்க. அப்படியே அந்த இடத்துல காட்டைக் கொஞ்சமா வெட்டி கடைய போடுறாங்க. பிறகு அப்படியே பின்னுக்கு இருக்கிற காட்டையும் வெட்டி வீட்ட கட்டி வாழுறாங்க. அதுக்கு பிறகு அவங்கட உறவினர்களையும் குடியேத்துறாங்க.

இது மட்டுமில்ல, காட்டு பழங்களான பாலைப்பழம், சூரப்பழம், வீரப்பழம் இப்படியான பல வகையான பழங்களை விக்கிறதுக்காக அந்த மரங்கள்ள ஏறி பறிக்கிறதுக்கு பதிலா மரத்தையே வெட்டுறாங்க.

இப்படித்தான் கொஞ்சம் கொஞ்சமா காடு அழிஞ்சிட்டு இருக்கு . அதனால நாங்களும் இப்படி செய்து இருக்கிற காட்டை அழிக்காம முடிஞ்ச வரைக்கும் பாதுகாப்பம்.

சு.திகழினி
கன்னியா

தாயகமும் வாழ்வும்